வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu வாரமலர்




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 139 | பக்கங்கள் : 16

# அரியாலையில் 3 அடி ஆழத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடு

## பெரும் புதைகுழியாக இருக்கலாம் என்று அச்சம் மழை காரணமாக அகழ்வுப் பணி இடைநிறுத்தம்







யாழ்ப்பாணம், மே. 18

**அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் மூன்றடி ஆழத்தில் ஒரு முழுமையான மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ள நிலையில் அந்த இடத்தில் பெரும் மனிதப் புதைகுழி காணப்படலாம் என்ற சந்தேகம் மேலும் வலுப்பெற்றுள்ளது.**

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் குழிகள் வெட்டப்பட்ட போது, மனித எச்சங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அந்த மனித எச்சங்கள் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பெப்ர வரி மாதம் 20ஆம் திகதி யாழ் நீதிமன்ற நீதிவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் வியாழக்கிழமை ஆரம்பமான நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் அகழ்வின்போதே இந்த மனித எலும்புக் கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டுள்ளது.

முழுமையான எலும்புத் தொகுதி, மண்டையோடு என்பவற்றுக்கு மேலதிகமாக கை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் பாரிய மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் நேற்று அதிகாலை முதல் யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் மழை காரணமாக அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. (அ)

# தேசிய மக்கள் சக்திக்குள் எந்த பிரச்னையும் இல்லை!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, மே. 18

"ஜே.வி.பியினருக்கும், தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் எவ்வித பிரச்னையும் இல்லை. நாம் சிறப்பாகவே இணைந்து பயணித்துவருகின்றோம்" - என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்துள்ள 6 மாதங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பிக்கிடையில் குழப்பம் ஏற்படும் என பலர் கருதினர். அது தொடர்பில் கதைகளை

பரப்பினார்கள். இன்றளவிலும் சமூகவலைத் தளங்களில் பதிவுகள் தொடர்கின்றன. இப்பதிவுகளை பார்க்கும்போது சிரிப்புதான் வருகின்றது.

எமது குழுவினர் புரிந்துணர்வுடன் சிறப்பாக செயற்பட்டு தமது பணிகளை

15

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று

## உணர்வுபூர்வ அஞ்சலிக்கு அழைப்பு

முள்ளிவாய்க்கால், மே 18

தமிழினப் படுகொலையை நினைவுகூரும் 16ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்றாகும். இன்று ஞாயிற்றுக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவியும் புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் தேசங்களிலும் இந்த நினைவுநாளை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் நடைபெறவுள்ளது. முற்பகல் 10.15 மணிக்கு கொள்கை பிரகடனம் வாசிக்கப்படும். 10.29 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்படும். இதைத் தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்படும். பொதுச் சுடர் ஏற்றப்படும் சமநேரத்தில் நினைவேந்தலில்

15

# வலி.வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரி மகஜர்!

யாழ்ப்பாணம், மே. 18

வலிகாமம் வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்கக்கோரி பொதுமக்களால் வடக்கு ஆளுநரிடம் மகஜர் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு வள நிலையம் என்னும் பொது அமைப்பினூடாக வலிகாமம் வடக்கின் மயிலிட்டி, பலாலி, தையிட்டி உள்ளடங்கலாக காணப்படும் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்குமாறு கோரி பிரதேச மக்களால் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது.

நீண்ட காலமாக கடற்றொழில் மற்றும் விவசாயம் செய்வதற்கும் தமது இருப்புக்குமான சொந்த நிலங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனவும் படிப்படியாக விடுவிக்கப்பட்டுவரும் நிலையில் முழுமையாக இன்னமும் விடுவிக்கப்படாமையை ஆளுநரிடம் எடுத்துக்கூறியும் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

15

# வாகன விபத்துகளால் 975 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 18

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 975பேர் வாகன விபத்துகளில் உயிரிழந்துள்ளதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகனத்தைச் செலுத்தும்போது சாரதிகளுக்கு ஏற்பட்ட நித்திரை கலக் கத்தினாலேயே அதிக விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை,

15

# சட்டவிரோத போதைப்பொருளுடன் இந்திய பிரஜை இலங்கையில் கைது!

கொழும்பு, மே. 18

நாகப்பட்டினத்துக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுள்ள கப்பலில் சட்டவிரோதமாக போதைப் பொருள் கடத்தி வந்த இந்திய பிரஜை ஒருவரை சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கப்பலில் வந்தவர்களை காங்கேசன்துறை துறைமுக சுங்கப் பிரிவினர் சோதனையிட்ட போது, இந்திய பயணி ஒருவரின் உடைமையில் மிக சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ கிராம் குஷ் ரக போதைப்பொருளை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இதை அடுத்து குறித்த நபரை கைது செய்த சுங்க பிரிவினர் , மேலதிக சட்ட நடவடிக்கைக்காக , மீட்கப்பட்ட போதைப் பொருளையும் , கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். (அ)

# தேசபந்து தென்னக்கோன் விசாரணைக்கு அழைப்பு!

கொழும்பு, மே. 18

தேஷபந்து தென்னக்கோன் பதவியின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவில் எதிர்வரும் 19 ஆம் திகதி முன்னிலையாகுமாறு தேசபந்து தென்னக்கோனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பதவி துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.


இதன்பிரகாரம் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு தேசபந்து தென்னக்கோனுக்கு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் மினி சூறாவளி இயல்பு வாழ்க்கை பாதிப்பு






வவுனியா, மே 18
வவுனியாவில் நேற்றுக் காலை வீசிய மினி சூறாவளி யால் மரங்கள் முறிந்து வீழ்ந்த துடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள் ளது.

நேற்றுக் காலை 07.00 மணியளவில் கடும் காற்று வீசி யதுடன் மழையும் பொழிந்தது. இதனால் வவுனியா மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் மின்தடையும் ஏற்பட்டது.

குறிப்பாக வவுனியா நகரப் பகுதியில் இருந்த நடைபாதை விற்பனை நிலையங்கள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

வவுனியா நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன. குறிப்பாக மின் வடங்களுக்கு மேல் மரங்கள் வீழ்ந்தமையால் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது.

தாழ்நிலப்பகுதிகளில் வெள் ளம் தேங்கியுள்ளதுடன், மக் களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (எ-10)




## நல்லூரில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாரத்தை முன்னிட்டு நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூ பிக்கு அருகாமையில் நேற்று இரத்ததான முகாம் இடம்பெற் றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் இடம்பெற் றது.

இதில், மக்கள் ஆர்வத்து டன் பங்கேற்று குருதிக் கொடை வழங்கினர். (எ- 05)

## முள்ளிவாய்க்கல் கஞ்சி வழங்கல்



யாழ்ப்பாணம், மே 18
அராலியில் நேற்றுக்காலை முள்ளிவாய்க்கல் கஞ்சி வழங் கப்பட்டது. வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சபேசனின் ஏற்பாட்டில் தமிழ் அரசுக்கட்சி அராலித் தொகு திக்கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கல் கஞ்சி வழங் கப்பட்டது. (எ)

## மின்வயரின் மீது முறிந்துவீழ்ந்த மரம் நீண்டநேரத்தின் பின் அகற்றப்பட்டது

வவுனியா, மே 18
வவுனியா பூந்தோட்டம் சந்தியில் காற்றினால் முறிந்து வீழ்ந்த தென்னைமரம் நீண்ட நேரத்தின் பின்னர் அகற்றப்பட் டது.

வவுனியாவில் நேற்று காலை முதல் கடும்காற்றுடன் கூடிய மழை பெய்தது. இந்த நிலை யில் பூந்தோட்டம் சந்தியில் வீதிக்கரையில் நின்ற தென்னை மரம் முறிந்து தொலைத் தொடர்பு மற்றும் மின்னார வயரின் மீது வீழ்ந்து ஆபத் தான நிலையில் காணப்பட் டது.

இது தொடர்பாக மின்சார சபைக்கும். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கும் பொதுமக்களால் தகவல் வழங் கப்பட்டிருந்தது. எனினும் மரம் முறிந்து பல மணிநேரங்க ளாக அகற்றப்பட்டிருக்க வில்லை மதியம் 12 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம் அந்த மரத்தை அகற்றியிருந்தது. (எ-10)



## 4 கிலோ குஷ் போதைப்பொருளுடன் காங்கேசன்துறையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 18
காங்கேசன் துறைமுகத்தில் 4 கிலோ குஷ் போதைப்பொரு ளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் இந்தியா விலிருந்து நாகப்பட்டினம் துறைமுகம் ஊடாக கப்பலில் குறித்த போதைப்பொருளை எடுத்து வந்தவேளை சுங்கத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய் யப்பட்ட சந்தேகநபர் போதைப்பொருள் பொலிஸ் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்ப டைக்கப்பட்டு காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-05)



## பசு மாட்டுடன் கார் மோதி விபத்து

யாழ்ப்பாணம், மே 18
யாழில் பசு மாட்டுடன் கார் மோதி விபத்துக்குள்ளானது.

மானிப்பாய் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட காக்கைதீவு சந்தைக்கு அருகாமையில் இந்த விபத்து நேற்றுக்காலை இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கி பய ணித்த கார் பசுமாட்டுடன் மோதிய நிலையில் கார் முன் பகுதி முற்றாகச் சேதமடைந் துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார், மாட் டின் உரிமையாளரை அடை யாளம் காணாத நிலையில் பிரதேச சபை ஊடாக உரிமை யாளரை அடையாளம் காண்ப தற்காக பிரதேச சபையிடம் பசுமாட்டினை ஒப்படைத்த னர். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (எ)

## நினைவேந்தல் வாரத்தையொட்டி நவாலி தேவாலயத்தில் அஞ்சலி



யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் வாரத்தை முன்னிட்டு இனப்படுகொலை நிகழ்ந்த இடங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

அந்தவகையில் நேற்றுக் காலை நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொட்டும் மழைக்கும் மத்தியிலும் ஈகச் சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத் தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியினருடன் உயிரிழந்தவர்க ளின் உறவினர்களும் இணைத்து கொண்டனர்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவா லயத்திலும் நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம் பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச் சியாக 13 குண்டுகளை வீசிய தில் 147 பேர் பலியாகினர். (எ-05)

## மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களே கூட்டுச்சேர கூட்டம் நடத்துகின்றனர்!

### இளங்குமரன் எம். பி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், மே 18
மக்களால் புறக்கணிக்கப் பட்டவர்கள் இன்று கூட்டுச் சேர கூட்டம் நடத்துகின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களின் ஆணை மூலம் 266 சபைகளை பெரும்




பான்மையாக பெற்றுள்ளது.

மக்கள் ஆணை இல்லாதவர் கள் இன்று ஒன்று சேர்கிறார் கள். ரணிலையும் ரணில் அர சாங்கத்தையும் மக்கள் ஒட்டு மொத்தமாக விரட்டி அடித்து உள்ளார்கள். இவர்கள் மக்களை அணி திரட்டுவதை விட்டு அவர்கள் அணி திரட்டுகின்றார் கள் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை - பிலிப்பைன்ஸ் இடையே

## புதிய வாய்ப்புகளை ஆராய இரு தரப்பினரும் இணக்கம்

கொழும்பு, மே 18

பங்களாதேஷின் டாக்காவில் உள்ள இலங்கைக்கான பிலிப்பைன்ஸ் தூதுவர் நினா பி. கெய்ங்லெட், பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று முன்தினம் சந்தித்தார்.

வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்த முக்கிய துறைகளில் புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்கும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.

இலங்கையில் உள்ள பிலிப்பைன்ஸ் சமூகம் தொடர்பான தூதரக விடயங்கள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டன. இது சம்பந்தமாக, வெளிவிவகார அமைச்சு தொடர்புடைய விடயங்கள் குறித்த கலந்துரையாடல்களை தொடரவும் தேவையான ஆதரவை வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜூன் முதல் டிசெம்பர் வரை பெரும் நஷ்டம் ஏற்படும்!

## 18. 3 வீதம் மின் கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, மே 18

**எதிர்வரும் ஜூன் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை மின்சார சபைக்கு பெரும் நஷ்டம் ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மின் கட்டணத்தை 18. 3 சதவீதமாக அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

மின்சார சபையால் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை மின்சார சபைக்கு பெரும் நஷ்டம் ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், ஏற்படும் செலவுகளை ஈடுசெய்ய மின் கட்டணத்தை 18. 3 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதி முடிவு ஜூன் மாதம் முதல் வாரத்தில் எடுக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ)

## தென்மராட்சி கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு





யாழ்ப்பாணம், மே 18

தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு. ஜெகதாசன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். தொழிலதிபர் பூ. பாஸ்கரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். (எ)

## முன்னாள் முதல்வர் சரோஜினியின் 27ஆவது ஆண்டு நினைவுதினம்




யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் 27ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் அந்தக் கட்சியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இந்த நினைவுதின நிகழ்வு இடம்பெற்றது. (எ-2-5)

## இலங்கை - கம்போடியா இடையே விரைவில் நேரடி விமான சேவை



கொழும்பு, மே 18

இந்தியாவின் புதுடில்லியில் உள்ள கம்போடிய தூதரகத்தில் பணியாற்றும் இலங்கைக்கான கம்போடிய தூதுவர் ராத் மானி, பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று முன்தினம் சந்தித்தார். இரு நாடுகளுக்கும் இடையேயான நேரடி விமான சேவையை ஏற்படுத்துவதற்கான இருதரப்பு ஒப்பந்தத்தை தூதுவர் ராத் மானி முன்மொழிந்தார். இதன் மூலம் வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்களிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளையும் அவர் விளக்கினார்.

கம்போடிய சுற்றுலாப் பயணிகளுக்கு விருப்பமான இடமாக இலங்கையை ஊக்குவிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக பிரதமர் ஹரிணி தெரிவித்தார். (எ)

# தமிழ் மாணவி உயிர்மாய்ப்பு குறித்து சகல தரப்பினரிடமும் விசாரணை!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, மே 18

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் தமிழ் மாணவி உயிர்மாய்த்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் ஆணைக்குழுவுக்கு அழைத்து வாக்குமூலங்களைப் பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்த 15 வயது மாணவி, அவர் வசிக்கும் தொடர்மாடிக் குடியிருப்பின் 7 ஆவது மாடியிலிருந்து குதித்து உயிர்மாய்த்த சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியில் பதிவானது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. இந்த விசாரணைகள் தொடர்பில் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொட்டாஞ்சேனை தொடர்மாடிக்குடியிருப்பிலிருந்து மாணவியொருவர் உயிர்மாய்த்த சம்பவம் தொடர்பில் எம்மால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அதன் முதற்கட்ட விசாரணை கடந்த 14 ஆம் திகதி ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர், பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் விசாரணைக்காக ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் பாடசாலை அதிபர் மற்றும் கணித பாட ஆசிரியர் ஆகியோர் காரணத்தை அறியத்தராமல், விசாரணைக்காக உரிய நேரத்துக்கு ஆணைக்குழுவில் முன்னிலையாகுவதற்குத் தவறியமையால், ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் அவர்களிடம் காரணம் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இச்சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தினர். இதேபோன்று வலயக் கல்விப்பணிப்பாளரின் சார்பில் பிரதி வலயக் கல்விப்பணிப்பாளர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி, விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

இதன்படி இச்சம்பவம் தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து 7 நாட்களுக்குள் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதி வலயக் கல்விப்பணிப்பாளருக்கும், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் விவரம் மற்றும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டது.

அத்தோடு தனியார் வகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி, குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் அளித்ததுடன், சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபரை மீண்டும் ஆணைக்குழுவுக்கு வருகைதரு மாறு அழைப்பு விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு, எம்மால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையை வெகுவிரைவில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேபோன்று இவ்விடயத்துடன் தொடர்புடைய சகல அரச கட்டமைப்புக்களும் அவற்றின் பணிகளை உரியவாறு ஆற்றியிருக்கின்றனவா என்பது குறித்தும், யாரேனும் அம்மாணவியின் அடிப்படை உரிமைகளை மீறியிருக்கிறார்களா அல்லது சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பது குறித்து ஆராய்வோம். அத்தகைய சம்பவங்கள் பதிவாகியிருப்பின், அதுபற்றி உரிய தரப்பினர் பொறுப்புக்கூறவேண்டும்.

அதுமாத்திரமன்றி எதிர்வருங்காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு கல்வி அமைச்சு உள்ளிட்ட கட்டமைப்புக்களால் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நாம் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் திடீர் வேலைநிறுத்தம் நியாயமற்றது

## போக்குவரத்து அமைச்சு அறிக்கை

கொழும்பு, மே 18

**மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி, தீர்வுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் நியாயமற்ற முறையில் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.**

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மேற்கொண்ட ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பதவி உயர்வு வழங்குவதில் தாமதம் செய்தல் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு செயல்முறையை செயல்படுத்தாமை ஆகிய இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்னிறுத்தி, ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் இந்த வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகளுக்கு அமைச்சு மட்டத்தில் தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தும் அவை செயல்படுத்தப்படாததற்கு திணைக்களத்தின் திறனற்ற தன்மையே காரணம் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் உடனடி வேலைநிறுத்தம் மேற்கொள்வது அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தவும் மக்களை பாதிக்கவும் முயல்வதாகவுள்ளது.

ரயில் சேவையை பராமரிக்க அமைச்சு மற்றும் அரசு அனைத்து வகையிலும் தலையீடு செய்யும் எனவும் போக்குவரத்து அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# ஈஸ்டர் தாக்குதல்; 12 பேர் விடுதலை

கொழும்பு, மே 18

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலுக்கு உதவியதாக கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 12 சந்தேக நபர்களையும் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இந்தச் சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவு, இவர்களுக்கு எதிரான விசாரணைகளை முடித்து, நீதிவானுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

பிரதம நீதிவானிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் படி, இந்த முறைப்பாட்டை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

இதன்படி, சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தில் கோரிக்கை ஒன்றை முன்வைத்து, இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களிடமிருந்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட தொலைபேசிகள் உள்ளிட்ட வழக்கு பொருட்களை அவர்களிடம் மீண்டும் வழங்க உத்தரவிடுமாறு கோரினார்.

இதன்படி, சம்பந்தப்பட்ட பொருட்களை சந்தேக நபர்களிடம் வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை

கொழும்பு, மே 18

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமித்ராராம வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிச்சூடு ஒன்று இடம்பெற்றது. இந்த நிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத இருவர், வீட்டின் முன்பாக நின்றிருந்த ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 42 வயதுடைய ஆணும் 70 வயதுடைய பெண்ணும் கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்காக கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சின்னம்மை நோய்க்கு எதிராக தடுப்பூசி வழங்கப்படவில்லை

கொழும்பு, மே 18

சின்னம்மை நோய்க்கு எதிராக அரச மருத்துவமனைகளில் இதுவரை தடுப்பூசி வழங்கப்படவில்லை என்றும் அத்தகைய தேவை எழாது என்றும் சுகாதார பிரதி அமைச்சர் ஹசங்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சின்னம்மை நோயின் கட்டுப்பாடற்ற பரவல் மற்றும் இந்நோய்க்கு வழங்கப்படும் மருந்துகளின் பற்றாக்குறை குறித்து வெளியாகும் ஊடக அறிக்கைகள் தொடர்பில் அவர் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், தற்போது சின்னம்மை நோயின் கட்டுப்பாடற்ற பரவல் எதுவும் காணப்படவில்லை. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு அரச மருத்துவமனைகளில் எவ்வித பற்றாக்குறையும் இல்லை.

இதுவரை அரச மருத்துவமனைகளில் இல்லாத மருந்து ஒன்றைப் பயன்படுத்தி, அதில் உடனடி பற்றாக்குறை ஏற்பட்டதாக காட்டி, நாட்டில் மருந்து தட்டுப்பாடு உள்ளதாக தவறான எண்ணத்தை உருவாக்குவதற்காக இந்த ஊடக அறிக்கைகள் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டவை.

மேலும், மக்களுக்குத் தேவையான மருந்துகளை எவ்வித பற்றாக்குறையுமின்றி தொடர்ச்சியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்குத் தேவையான மருந்து இருப்புகள் ஏற்கனவே நாட்டில் உள்ளதாக பிரதி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கடுவெல நீதிவானின் அலுவலக அறைக்கு சீல்

கொழும்பு, மே 18

கொழும்பு, கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவானாக பணியாற்றிய சானிமா விஜயபண்டாரவின் அலுவலக அறை, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் (சீல்) முத்திரையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, நீதிவான் சானிமா விஜயபண்டார நாளை திங்கட்கிழமை நீதிமன்றத்துக்கு வந்து, தனது அலுவலக அறையில் உள்ள தனிப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதுவரை, குறித்த அலுவலக அறைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடுவெல பொலிஸார் கூறினர்.

சானிமா விஜயபண்டார தொடர்பில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைய அவரது அலுவலக அறை முத்திரையிடப்பட்டுள்ளது.

தற்போது, கடுவெல நீதிவான் நீதிமன்றத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# விபத்தில் சிக்கிய செய்தியாளர் பலி

ஹபரணை, மே 18

ஹபரணை - திருகோணமலை வீதியில் அநுராதபுரம், ஹபரணை - கல்வங்குவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளம் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

வாகனமொன்று இரத்தினபுரியிலிருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் திருகோணமலை கந்தளாய் பகுதியைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் ஆவார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# புதிய சட்டங்கள் மூலம் டிஜிற்றல் பொருளாதாரம்

## ஜனாதிபதி அநுர தலைமையில் ஆராய்வு



கொழும்பு, மே 18

புதிய சட்டங்கள் மூலம் டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பிலான நிறுவனங்களை அமைப்பது குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் முதன்மை அபிவிருத்தித் துறையான டிஜிற்றல் பொருளாதார அபிவிருத்திக்கு அமைவான வரைவின் கீழ் திட்டமிடப்பட்டிருக்கும் பிரதான வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பொது மக்களுக்கு அதிகளவான பிரதிபலன்களை பெற்றுத்தரும் பொதுவான டிஜிற்றல் உட்கட்டமைப்புக்கான தீர்வுகளைத் துரிதப்படுத்தல் மற்றும் டிஜிற்றல் அடையாள அட்டை, கோபே அரச கொடுப்பனவு கட்டமைப்பு, டிஜிற்றல் தொலைக்காட்சி வேலைத்திட்டம் மற்றும் டிஜிற்றல் பொருளாதார இலக்குகள் தொடர்பில் இதன்போது நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினதும் இலங்கை தகவல் பாதுகாப்பு அதிகார சபையினதும் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பிலும் புதிய சட்டங்கள் மூலம் டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பிலான நிறுவனங்களை அமைப்பது தொடர்பிலான முன்மொழிவுகளும் இங்கு மீளாய்வு செய்யப்பட்டன. (எ)

# பயணிகளின்றி வெறிச்சோடிய நானுஓயா ரயில் நிலையம்

## ஆசனங்களை முன்பதிவு செய்தோர் சிரமம்

நானுஓயா, மே 18

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக நானுஓயாவில் பயணிகள் இன்றி ரயில் நிலைய வளாகம் வெறிச்சோடி காணப்பட்டது.

ஆட்சேர்ப்பு பிரச்னைகள், பதவி உயர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால், நானுஓயாவிலிருந்து இயக்கப்படும் விசேட ரயில்கள் நேற்று இரத்துச் செய்யப்பட்டன. மேலும் நேற்றுக் காலை முதல் ஏனைய ஊழியர்கள் இணைந்து ரயில் நிலையத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். மேலும், ரயில் கடவை திருத்தப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.05.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## சொந்த மக்களுக்காக நிற்பீர்களா சஜித் பிரேமதாஸ?

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பலஸ்தின மக்களுக்காக முன்நிற்பதற்கு தயார் என்று குறிப்பிட்டிருக்கின்றார். பலஸ்தீன மக்கள் அரச பயங்கரவாதத்துக்கு ஆளாகி, வாழும் உரிமையை இழந்திருப்பதாகவுதம், அவர்களின் மனி உரிமைகள் பறிக்கப்படுவ தாகவும் பிரேமதாஸ கூறுகின்றார்.

பாதிக்கப்படும் மக்களின் பக்கமாக ஓர் அரசியல்வாதி நிற்பதை பாராட்டலாம். ஆனால், சொந்த மக்கள் துன்பத்தில், உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக, தொடர்ந்தும் நீதி கிடைக்காதவர்களாக அலைக்கழிக்கப்படும் போது, அவர்களுக்காக குரல் கொடுக்காத சஜித் பிரேமதாஸ, எங்கோ இருக்கும் பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுப்பதுதான் ஆச்சியரியமாகவும், இன்னொரு புறம் அரசியல் அசிங்கமாகவும் இருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் அவலத்தை சந்தித்து 16 ஆவது ஆண்டை நினைவு கொள்கின்றனர். இந்த 16 வருடங்களில் இறுதி யுத்தம் தொடர்பான பொறுப்புக் கூறலில் எவ்வித முன்னேற் றமும் ஏற்படவில்லை. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சிறிய ஆர்வம் காண்பிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றங் கள் எவையும் ஏற்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் ஓர் எதிர்க் கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ காண்பித்த கரிசனை என்ன? பாதிக்கப்பட்ட மகக்ளின் நீதிக்காக அவர் பேசிய விடயங்கள் என்ன? எவையுமில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கோரினார். தமிழ் மக்களின் வாக்குகளை அவர் முழுமையாக பெற்றிருந்தாலும் வெற்றிபெற்றிருக்க முடியாது என்பது வேறு விட யம். தென்பகுதியில் ஒரு சிங்கள அலை ஏற்பட்டதால் அதன் பின்னர் எண்ணிக்கையில் சிறுபான்மையினரின் வாக்குகள் பெரியளவில் பெறுமதியானதாக இருக்க வாய்ப்பில்லை. தவிர, தேசிய மக்கள் சக்தியின் எழுச்சிக்கு முன்னால் எதிரணிகள் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தன. முக்கியமாக சிதறி போட்டியிட்டன. ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒத்துப் போகவும் சஜித் பிரேமதாஸ முன்நிற்க வில்லை.

ஒரு பலவீனமான எதிர்கட்சித் தலைவராகவே அவரது காலம் நகர்கின்றது. தொடர்ந்தும் அவருடைய தலைமைத்துவத்தை ஏற்கக் கூடிய நிலையில் அவருடைய கட்சியினரே இருப்பார்களாக என்பதே கேள்விதான். இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் நீதிக்காக குரல் கொடுக்காத சஜித் பிரேம தாஸ, பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக உழைக்கப் போவதாக கூறுவதிலிருந்தே அவருடைய அரசியல் அணுகுமுறையை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதி தேர்தல்களின் போது, தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டவர்கள் எந்தவொரு தென்னிலங்கை தலை வர்களும், தேர்தல் முடிந்ததும், தமிழ் மக்களின் நியாயங்களை குப்பைத் தொட்டிக்கு அனுப்பியதே வரலாறு. இந்த வரலாற்றை பகிர்ந்து கொண்டவர்களில் சஜித் பிரேமதாஸவும் ஒருவர். ஆனால் இவ்வாறான தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு, எந்தவொரு நிபந்தனையுமின்றி ஆதரவளிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்பில்தான் தமிழ் மக்கள் இந்த இடத்தில் சிந்திக்க வேண்டும்.

## மன்னாரில் சீரற்ற காலநிலை! இயல்பு வாழ்க்கை பாதிப்பு!!

மன்னார், மே. 18

மன்னாரில் நேற்று காலை வீசிய பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது.

நேற்று காலை 6.00 மணி யளவில் கடும் காற்று வீசிய துடன் மழையும் பெய்தது.

இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சில மணி நேரம் மின்தடை ஏற் பட்ட நிலையில், மின்சாரம் வழமைக்கு திரும்பியது.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மன்னார் பேசாலை கிராம மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்கினர்.

நேற்று காலை கடற் றொழிலுக்கு சென்ற மீனவர் கள், அவசரமாக கரை திரும் பினர்.

கரையில் நிறுத்தி வைக் கப்பட்ட படகுகள் மற்றும் கண்ணாடி இழைப் படகு கள், காற்றில் சிக்கிய நிலை யில் கரையில் ஒதுக்கப்பட் டது.

இதனால், படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பலத்த காற்று காரணமாக பேசாலை கடற்கரையில் காணப்பட்ட மீனவர்களின் மீன் வாடிகள் சேதமடைந் துள்ளன.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் உள்ள ஏனைய மீனவ கிராமங்களி லும் மீனவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது டன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப் பட்டுள்ளது. (அ)

## கைதடி முதியோர் இல்லத்தில் வசித்துவந்த வயோதிபப் பெண் காய்ச்சலால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே. 18

கைதடி முதியோர் இல் லத்தில் வசித்து வந்த வயோ திப பெண் ஒருவர் காய்ச்சல் காரணமாக நேற்று உயிரிழந் துள்ளார். கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த பரராஜ சிங்கம் லோகநாயகி (வயது 71) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

குறித்த பெண் கைதடி பகு தியில் உள்ள அரச முதியோர் இல்லத்தில் வசித்து வந்துள் ளார். இந்நிலையில் அவர் கடந்த 4 நாட்கள் காய்ச்ச லால் பாதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பிக்கப்பட் டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக ளுக்காக சடலம் யாழ்ப்பா ணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள் ளது. (அ-05)

## 5 மோட்டர் சைக்கிள்கள் திருடிய இளைஞர் கைது!

வவுனியா, மே. 18

பல்வேறு பகுதிகளில் 5 பல்சர் மோட்டர் சைக்கிள் களைத் திருடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று தெரிவித் தனர்.

இம் மாதம் வவுனியா, ஈரப்பெரியகுளம், மதவாச்சி, வவுனியா - முதலாம் குறுக் குத் தெரு, மதவாச்சி - அட்டவீரக்கொட, செட்டிக் குளம் ஆகிய பகுதிகளில் பல்சர் ரக மோட்டர் சைக் கிள்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோ தகர் ஜெயதிலக தலைமை யிலான பொலிஸ் குழு தீவிர விசாரணைகளை முன்னெ டுத்திருந்தது. இதன்போது சிதம்பரபுர வீதி, ஈரப்பெரிய குளம் பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில் குறித்த 5 பல்சர் மோட்டர் சைக்கிள்களும் முறையே 550,000 ரூபா, 299,500 ரூபா, 500,000 ரூபா, 300,000 ரூபா, 970,000 ரூபா ஆகிய விலை களில் விற்பனை செய்யப்பட் டிருந்தமை தெரியவந் தது.

இதனையடுத்து குறித்த 5 பல்சர் மோட்டர் சைக்கிள் களும் பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா கவும் பொலிஸார் தெரி வித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமது செம்மையானால்...

இரா. சாந்தகுமார்



குடும்ப உறவுகளில் சுமுகத் தன்மை நிலவ குடும்ப உறுப்பினர்களிடையே விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, உள் ஒன்று வைத்து புறமொன்று பேசாத வெளிப்படைத்தன்மையைக் கடைபிடித்தல் போன்ற குணாதிசயங்கள் அவசியமாகும்.

குடும்பநல நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு போகிறது. உடன் பிறந்தாருக்கே சொத்துரிமையை சற்றே விட்டுக் கொடுக்க மறுக்கும் மனோபாவத்தால் ஒருவரையொருவர் அழிக்கவும் துணிகின்றனர். இவற்றுக்கு அப்பாற்பட்டு குடும்ப உறவுகளிடையே நல்லுறவைப் பராமரிப்பது நன்கு பக்குவப்பட்ட மனநிலை கொண்டவர்களுக்கே சாத்தியமாகும்.

நம்மால் பேசப்படாத வார்த்தைகளுக்கு நாம் எஜமானர். நம்மால் பேசப்பட்ட வார்த்தைகள் நமக்கு எஜமானர் என்பதை உணர்ந்தாலே எதையும் பேசுவதற்கு ஒரு முறைக்கு இரு முறை பல முறை யோசிக்கத் தோன்றும். துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பலர் தெரிந்தே சாத்தியமில்லாத வாக்குறுதிகளை அள்ளிவீசுவதும் பின்னர் அதற்காக பெயரளவில் வருத்தம் தெரிவிப்பதும் மிகச் சாதாரணமாகி விட்டது.

மன மகிழ்ச்சியான குடும்பத்துக்கு, குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரின் மனநலனும் இன்றியமையாதது. இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான அச்சு, மின்னணு ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் குடும்பங்களில் நிலவும் சச்சரவுகள் அதன் காரணமாக நடைபெறும் கொலைச் சம்பவங்களையே பிரதானமாகப் பார்க்க முடிகிறது. ‘மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற’ என்கிற திருக்குறள், மனதில் தீய எண்ணங்கள் இல்லாதிருத்தலே எல்லா அறங்களையும் பெற்றதற்கு நிகர் என்கிறது. ஆனால், மனதை மாசடையச் செய்யும் புறக்காரணிகள் நிறைந்த சூழலில் நாம் வாழும் நிலையில் உள்ளோம். இப்புறக் காரணிகளுள் தொடர் நாடகங்களை ஒளிபரப்பும் சில தனியார் தொலைக்காட்சி சேனல்களும் இருப்பதுதான் வேதனை.

பெண்களைக் கவரும் வகையில் ஒளிபரப்பப்படும் இத்தொடர் நாடகங்களில், முதன்மை கதாபாத்திரமாக வரும் பெண்களைத் தவிர, இதர கதாபாத்திரங்கள் குறிப்பாக பெண்கள் கொடூரமானவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். மேலும், குடும்ப உறுப்பினர்களே ஒருவரை ஒருவர் வசை பாடுவது, பழி தீர்க்க திட்டமிடுவது, அடியாள்களை ஏவி ஆள்கடத்தல் செய்வது, போதைப் பொருள் பயன்படுத்துவது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் காட்சிகள் இத்தொடர் நாடகங்களில் மிகச் சாதாரணமாக இடம் பெறுகின்றன. பல லட்சம் மக்களின் பொழுதுபோக்கு அம்சமாக சின்னத்திரை தொடர் நாடகங்களின் மூலம் ஒளிபரப்பப்படும் தணிக்கைச் செய்யப்படாத குடும்ப நல்லுறவின் புனிதத்தை தரமிழக்க செய்யும் காட்சிகளால், மக்களின் மனநிலை மாசுபடும் வாய்ப்புகள் உண்டு.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் கோட்டயம், திருவனந்தபுரம், மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் அம்மாநில மகளிர் ஆணையம் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்கள் பற்றிய நடத்திய ஆய்வில், தற்போது ஒளிபரப்பாகும் சின்னத்திரை தொடர் நாடகங்கள் ஒளிபரப்பில் சமூகத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் காட்சிகள் இல்லாத வகையில் உரிய மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என 57 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். 43 சதவீதம் பேர் சின்னத்திரை தொடர் நாடகங்கள் மக்களிடையே தவறான கருத்துகளையே பரப்புவதாகத் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் சின்னதிரையில் ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், திரைப்பட குழுவோ அல்லது தனியாக ஓர் தணிக்கைக் குழு அமைத்தோ சின்னத்திரை தொடர் நாடகங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டும் என மாநில அரசுக்கு அம்மாநில மகளிர் ஆணையம் சிபாரிசு செய்துள்ளது.

தேசிய மனநல ஆய்வு வெளியிட்டுள்ள அறிக்கையில் - லண்டன் கிங்ஸ் கல்லூரியை சேர்ந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் நாக்மே நிக்கெஸ்லட் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் 20 நபரில் ஒருவர் மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிய வருகிறது. உலக அளவில் சுமார் 26.4 கோடி மக்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

சக உறவுகள் உச்சரிக்கும் பண்படாத, மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள், வரவுக்கு மிஞ்சிய ஆடம்பரச் செலவுகளால் குடும்பத்தில் ஏற்படும் நிதி நெருக்கடி, பணியிடங்களில் உள்ள அதிகப்படியான வேலைப்பளு, உடல் நலச் சீர்கேடு ஆகியன மன அழுத்தத்தை ஏற்படுத்தும் சில காரணிகளாகும். மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் பலர், தமது மன அழுத்தம் குறித்தான விழிப்புணர்வு இல்லாதிருக்கின்றனர். சிலர் நடைபயிற்சி, உடற்பயிற்சி கூடங்களுக்குச் செல்லுதல் ஆகியவற்றின் மூலம் தம் உடல் நலத்துக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை மனநலத்துக்கு அளிப்பதில்லை.

ஒரு குடும்பத்தில் ஒருவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டாலும் அது அக்குடும்பத்தின் இதர உறுப்பினர்கள் இடையிலான நல்லுறவில் சமநிலையின்மையை ஏற்படுத்தும் வாய்ப்புகள் உள்ளது.

‘மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டாம்’ என்கிறார் அகத்திய மாமுனி. எனவே, மனதைச் செம்மையாக்கும் அகச் சூழலையும், புறச் சூழலையும் உருவாக்க வேண்டும்.’ அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்’ எனக் கூறும் திருவள்ளுவர் வாக்கின்படி பொறாமை, பேராசை, கோபம், பிறர் மனதைப் புண்படுத்தும் சொற்கள் இவற்றை தவிர்த்த அறம் சார்ந்த வாழ்க்கை வாழ்வதோடு தம் மனநலனை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால், குடும்ப உறவுகள் செம்மை அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ●

## இந்தவார ராசிபலன் 18.05.2025 - 24.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 04
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகிய வற்றில் முதலீடு செய்வது நல்லது. பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்குப் புதிய வாகன யோகம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக் கும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்ட பின் அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு ஓரளவு பணவரவு இருக்கும். நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரி வீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாக னம் வாங்கும் யோகம் ஏற்படும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது வயதில் ஜே.வி.பி.யும் ஜனாதிபதி அநுரா கூறும் மனச்சாட்சியும்



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஆரம்பிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமையுடன் அறுபது ஆண்டுகள் நிறைவடைந்தன. காலஞ்சென்ற என். சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனச்சார்பு) வாலிபர் இயக்கத்தின் ஒரு முக்கிய தலைவராக விளங்கிய ரோஹண விஜேவீர முரண்பாடுகள் காரணமாக கட்சியில் இருந்து விலகி 1965 மே 14 ஆம் திகதி ஜே.வி.பி. யை தாபித்தார்.

அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு தடவைகள் ஆயுதக்கிளர்ச்சிகளை முன்னெடுத்து இரத்தக்களரிகளை கடந்து வந்த ஜே.வி.பி. ஜனநாயக அரசியலில் பிரவேசித்த பிறகு அதன் ஐந்தாவது தலைவரான அநுரா குமார திசாநாயக்கவின் தலைமையில் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரமாக கடந்த வருடம் ஆட்சியதிகாரத்துக்கு வந்தது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவசியமான 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறாமல் திசாநாயக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கு வந்த போதிலும், இரு மாதங்களுக்கு பிறகு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றி சாதனை படைத்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் அரசாங்கத்தை அமைத்த முதல் இடதுசாரி கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜே.வி.பி. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆறு தசாப்தங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. மூன்று வருடங்களுக்கு முன்னர் இதே காலப்பகுதியில் மூண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் கிளர்ச்சியே தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வருவதற்கு வசதியான அரசியல் நிலைவரத்துக்கு வழிவகுத்தது. தெற்காசியாவில் நேபாளத்துக்கு பிறகு ஆயுதக் கிளர்ச்சி செய்த அரசியல் இயக்கம் ஒன்று ஜனநாயக தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வந்த இரண்டாவது நாடாக இலங்கை விளங்குகிறது.

தலைமறைவாக இயங்கிய புரட்சிகர இயக்கம் என்ற நிலையில் இருந்து மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஆளும் கட்சி என்ற நிலைக்கான ஜே.வி.பி.யின் பயணம் இலங்கையின் அரசியல் நிலக்காட்சியை மாற்றியமைத்தது. அதன் வெற்றி நாட்டின் அரசியலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புடைபெயர்வை பிரதிபலித்தது. இத்தகைய ஒரு பின்புலத்தில், ஏழு மாதகாலமாக பதவியில் இருந்தவரும் நிலையில் ஜே.வி.பி. அதன் 60 வது வருட நிறைவை கடந்த வாரம் கொண்டாடியது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற பேரணியில் ஜனாதிபதி திசாநாயக்க ஜே வி.பி. ஒரு அரசியல் சக்தியாக தொடருவதற்கு மனச்சாட்சி, துணிச்சல் மற்றும் நடைமுறை அரசியல் அறிவு ஆகியவை முக்கியமான பாத்திரத்தை வகித்தன என்று குறிப்பிட்டிருந்தார். தனது கட்சியின் பயணம் குறித்து அவர் தெரிவித்த கருத்துக்கள் முக்கிய கவனத்துக்குரியவையாக இருக்கின்றன.

"ஜே.வி.பி.யின் வரலாறு பூராவும் எமது மனச்சாட்சியே எமக்கு சரியான பாதையை காட்டியது. மனச்சாட்சியே எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் எமக்கு துணிச்சலை கொடுத்தது. எமது மனச்சாட்சியின் காரணமாகவே உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்ட சகலரையும் விடவும் நாம் மேம்பட்டு நிற்கிறோம். எமது மனச்சாட்சியின் அடிப்படையிலேயே நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

"துரோகங்களுக்கு மத்தியிலும் கூட எமது மனச்சாட்சியின் அடிப்படையில் பணியாற்றுவோம் என்ற உத்தரவாதத்தை மக்களுக்கு நாம் வழங்குகிறோம். மற்றைய எந்தவொரு அரசியல் முகாமிடமும் இல்லாத வெல்லமுடியாத துணிச்சல் எமது கட்சியிடம் இருக்கிறது. குறைபாடுகளையும் தவறுகளையும் ஒத்துக்கொண்டு எம்மைத் திருத்திக் கொள்வதற்கு போதுமான துணிச்சல் எம்மிடம் இருக்கிறது. சொல்லொணா இடர்பாடுகளுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் பணியாற்றுவதற்கான துணிச்சல் எம்மிடம் இருக்கிறது.

"எமது அரசியல் பயணத்தை நிறுத்துவதற்கு வழிவகுத்த பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால், பயணத்தை இடைவிடாமல் தொடருவதற்கு எமக்கு துணிச்சல் இருந்தது. கொந்தளிப்புகளின் ஊடாக எமது கட்சியின் வெற்றிக்கு துணிச்சலே வழிவகுத்தது. அத்தகைய வலிமை வேறு எந்த கட்சியிடமும் கிடையாது. எமது முகாம் வெற்றியை நோக்கிய பயணத்தை தொடருவதற்கு நடைமுறை அறிவும் முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்தது. வெற்றி தொலைவில் இருப்பதாக தோன்றிய ஒரு நேரத்தில் அதைச் சாதிப்பதற்கு நடைமுறை அறிவு எமக்கு உதவியது.

"சவால்களை எதிர்நோக்கவேண்டி வந்தாலும் கூட கொந்தளிப்புக்கு மத்தியிலும் கப்பல் சரியான பயண இலக்கை அடையும். எமது கட்சியின் உறுப்பினர்கள் பெரும் கொடுமைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளானார்கள். எமது கட்சி மனிதகுலத்தின் நன்மைக்காக தியாகங்களைச் செய்த வரலாற்றைக் கொண்டது. உண்மைக்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயாராயிருப்பதால், எமது முகாம் வெல்ல முடியாத ஒரு சக்தியாக மாறியிருக்கிறது. வெற்றிக்காக சளைக்காமல் பணியாற்றுவதற்கு நாம் தயாராயிருக்கிறோம்" என்று ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி கூறியதை சுருக்கமாகச் சொல்வதானால், மனச்சாட்சியும் துணிச்சலும் நடைமுறை அறிவுமே ஜே.வி.பி.யின் வெற்றியின் தூண்கள். இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஜே.வி.பி. அதிகாரத்துக்கு வரக்கூடியதாக இருந்தது உண்மையிலேயே ஒரு வரலாற்று சாதனை என்பதை மறுக்க இயலாது. ஆனால், அது இன்று எந்தளவுக்கு இடதுசாரி இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை பின்பற்றுகின்றது என்ற ஒரு முக்கிய கேள்வி இருக்கிறது.

முதன்முறையாக ஆட்சியதிகாரத்துக்கு வந்த ஒரு இடதுசாரிக் கட்சி என்ற வகையில் ஜே.வி.பி. தலைமையிலான அரசாங்கத்தின் ஏழு மாதகால நிருவாகத்தை அதன் முழுமையான செயலாற்றலையும் மதிப்பிடுவதற்கு அளவுகோலாக பயன்படுத்ததுவது பொருத்தமானதல்ல. ஆனால், அதன் இதுவரையான ஆட்சி எதிர்காலத்தில் அது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் எந்தளவுக்கு வல்லமையைக் கொண்டதாக செயற்படும் என்பதை மதிப்பிடுவதற்கு ஓரளவுக்கு போதுமானது




எனலாம்.

இலங்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் போன்று நாட்டின் சகல இனமக்களினதும் சகல பிராந்தியங்களினதும் பெருமளவு ஆதரவுடன் வேறு எந்தவொரு அரசாங்கமும் முன்னர் பதவிக்கு வந்ததில்லை. கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் கூடுதலான ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியதைப் போன்று முன்னர் எந்தவொரு தென்னிலங்கை கட்சியும் சாதித்துக் காட்டியதில்லை. நாடு தழுவிய ஆணையை தாங்கள் பெற்றிருப்பதாக ஜனாதிபதி திசாநாயக்கவும் அரசாங்க தலைவர்களும் எப்போதுமே பெருமையாகக் கூறுவதற்கு தவறுவதில்லை.

ஆனால், தங்களுக்கு கிடைத்திருப்பது ஒரு பல்லின சமூகத்தின் ஆணை என்பதை மானசீகமாகப் புரிந்து கொண்டு அரசாங்க தலைவர்கள் எந்தளவுக்கு சகல சமூகங்களையும் அரவணைக்கும் ஒரு ஆட்சிமுறையை முன்னெடுப்பதில் நாட்டம் காட்டுகிறார்கள் என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது. இந்த இடத்தில் தங்களது அரசியல் பயணத்தை வழிநடத்தியதாக ஜனாதிபதி திசாநாயக்க கூறும் மனச்சாட்சி குறித்து நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

பாரம்பரியமான இடதுசாரி இயக்கத்தின் மீதான அதிருப்தியும் 1960 களின் நடுப்பகுதியில் ஜே.வி.பி.யின் தோற்றத்துக்கு ஒரு முக்கியமான காரணி என்று கூறப்படுவதுண்டு. அதே போன்று பாரம்பரியமான அதிகார வர்க்க அரசியல் கட்சிகள் மீதான மக்களின் வெறுப்பே அறுபது வருடங்களுக்கு பிறகு ஜே.வி.பி.யை ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்திருக்கிறது. இந்த ஆறு தசாப்த காலகட்டத்தில் நாட்டைச் சின்னாபின்னப்படுத்திய முக்கியமான சகல நெருக்கடிகளில் இருந்தும் முறையான படிப்பினையை பெற்றுக் கொண்டவர்களாக ஜே.வி.பி.யின் தலைவர்கள் தங்களது அரசாங்கத்தின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் வகுக்க வேண்டும். அது விடயத்தில் அவர்களிடம் பாரிய கரிசனைப் பற்றாக்குறை காணப்படுகிறது.

முறைமை மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் கொண்டுவரப் போவதாகவும் இனவாதத்தையும் மதத்தீவிரவாதத்தையும் மீண்டும் தலைகாட்ட அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறுவதை கேட்கும்போது இனிப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், தீர்மானங்களை மேற்கொள்ளும் அரசாங்க அமைப்புகளுக்கு நியமனங்களைச் செய்வதற்கு கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறை தொடக்கம் சிறுபான்மைச் சமூகங்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளை கையாளுவது வரை அரசாங்கத்திடம் ஆரோக்கியமான மாற்றங்களைக் காணமுடியவில்லை.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த சிக்கலான தேசிய இனப்பிரச்சினைக்கு தேசிய மக்கள் சக்தியினால் குறுகிய காலத்திற்குள் தீர்வைக் கண்டுவிட முடியும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அந்த பிரச்சினைக்கு நாளடைவில் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு முன்னைய அரசாங்கங்களை விடவும் வேறுபட்ட அணுகுமுறையை புதிய அரசாங்கம் கடைப்பிடிப்பதில் நாட்டம் காட்டும் என்பதற்கான எந்தவிதமான அறிகுறியையும் கூட காணமுடியாமல் இருப்பது கவலைக்குரியது.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து இன்றுடன் சரியாக பதினாறு வருடங்கள் நிறைவுபெறுகின்றன. அந்த கொடிய போரின் விளைவாக வடக்கு, கிழக்கில் தோன்றிய பல்வேறு மனிதாபிமானப் பிரச்சினைகளை கையாளுவதில் கூட தேசிய மக்கள் சக்தியிடம் வேறுபட்ட ஒரு அணுகுமுறையைக் காணமுடியாமல் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட இதுவரையான சகல முயற்சிகளையும் எதிர்த்துநின்ற ஒரு கடந்த காலத்தை ஜே. வி.பி. கொண்டிருக்கிறது. ஆனால், இதுவரை காலமும் அந்த பிரச்சினை தொடர்பில் கடைப்பிடித்துவந்த கொள்கைகளிலும் அணுகுமுறைகளிலும் மாற்றங்களைச் செய்யாமல் புதிய கலாசாரம் பற்றி உரத்துப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

பாரம்பரியமாக தமிழ் தேசியவாத கட்சிகளுக்கு வாக்களித்துவந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் அவற்றை பெருமளவுக்கு நிராகரித்து தேசிய மக்கள் சக்தியை ஆதரித்தார்கள். அந்த மக்களுக்கு எதிர்காலம் குறித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி திசாநாயக்க சரியான சமிக்ஞையைக் காண்பிக்காததன் விளைவை உள்ளூராட்சி தேர்தல்களில் காணக்கூடியதாக இருந்தது. இந்த கருத்தை தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் எல்லாவற்றையும் நிராயப்படுத்துவதாக வியாக்கியானம் செய்யத் தேவையில்லை.

ஆனால், தென்னிலங்கையில் எதிர்ப்புகள் கிளம்பும் என்பதற்காக எவ்வளவு காலத்துக்குத்தான் இனப்பிரச்னைக்கு நியாயபூர்வமான ஒரு அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் அரசாங்கங்களும் பெரும்பான்மையின சமூகமும் மாறாத நிலைப்பாட்டுடன் நியாயமற்ற முறையில் நடந்துகொள்ளப் போகின்றன? சிறுபான்மைச் சமூகங்களின் நியாபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக தென்னிலங்கைச் சமூகத்தில் காணப்படும் கடுமையான உணர்வுகளை மேலும் வலுப்படுத்தக்கூடிய அணுகுமுறைகளை அல்ல, இனப்பிரச்னைக்கு தீர்வைக் காணவேண்டிய அவசியத்தை அந்த மக்களுக்கு உணர்த்துவதற்கும் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்குமான நடவடிக்கைகளிலலேயே தேசிய மக்கள் சக்தி இறங்க வேண்டும். அதற்கு முதலில் ஜே.வி.பி. தலைவர்கள் தங்களது பழைய நிலைப்பாடுகளை மாற்ற வேண்டும். இந்த இடத்தில் மீண்டும் மனச்சாட்சி குறித்து அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. தென்னிலங்கையில் கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகள் மீண்டும் வலுவான முறையில் வெளிக்கிளம்புவதற்கு சந்தர்ப்பங்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், கடந்த கால பெரும்பான்மையினவாத அணிதிரட்டல்கள் இறுதியில் தென்னிலங்கைச் சமுதாயத்துக்கும் கூட பாதகமாக அமைந்த வரலாற்றுப் பாடத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு சரியான பாதையைக் காட்டுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசியல் துணிச்சலை வெளிக்காட்ட வேண்டும். தங்களை வெற்றிக்கு வழிநடத்திய மனச்சாட்சி, துணிச்சல் மற்றும் நடைமுறை அறிவை இந்த விடயத்திலும் ஜனாதிபதியும் அரசாங்கமும் வெளிக்காட்ட வேண்டும்.

இனவாதமும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலைகாட்டுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று ஓயாமல் கூறிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க, மீண்டும் நாட்டின் இரு முனைகளிலும் தேசியவாத அரசியல் உணர்வுகள் கூர்மையடையக்கூடிய சூழ்நிலை தோன்றியிருப்பதை கவனத்தில் எடுத்து மீண்டும் இனமோதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய நிகழ்வுப்போக்குகளை தடுப்பதற்கான தலையாய பொறுப்பைக் கொண்டிருக்கிறார். அதற்கு ஜே.வி.பி.யை வெற்றிக்கு வழிநடத்திய மனச்சாட்சி, துணிச்சல் மற்றும் நடைமுறை அறிவை பயன்படுத்த வேண்டும். ஜனாதிபதி கிடைக்கின்ற வரலாற்றுச் சந்தர்ப்பத்தை தவறவிடுகின்ற தலைவர்களின் வரிசையில் அவரும் இணைந்துவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக சமுதாயம் பன்முக ஆட்சிமுறையை வேண்டிநிற்கிறது!



கலாநிதி ஜெகான் பெரேரா

கடந்தவாரம் இடம்பெற்ற உள்ளூராட்சி அரசாங்க தேர்தல்கள் நாட்டில் ஜனநாயக முறைமையை வலுப்படுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அண்மைக்கால ஆட்சியாளர்களை (அவர்களில் சிலர் அரசியல் அரங்கில் தொடர்ந்தும் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்) விடவும் பெருமளவுக்கு தேர்தல் விதிகளை தற்போதைய அரசாங்கம் பின்பற்றியிருக்கிறது.

அரச வளங்கள் (ஊடகங்களும் நிதியும்) பெருமளவில் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருந்தது முக்கியமாக கவனிக்கத்தக்கது. கடந்த நான்கு தசாப்தங்களாக அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசாங்கங்களின் கீழ் அரச வளங்கள் தேர்தர்களின்போது துஷ்பிரயோகம் செய்யப்படுவது என்பது வழமையானதாக இருந்தது. நாட்டின் ஜனநாயக கலாசாரத்தில் இன்று காணக்கூடியதாக இருக்கின்ற இந்த முன்னேற்றத்தை சுயாதீனமான தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அவற்றின் அறிக்கைகளில் குறிப்பிட்டிருக்கின்றன.

நீண்டகாலமாக நிலைபெற்ற ஜனநாயக நாடுகளில் கூட ஜனநாயகம் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் ஒரு உலகில், தேர்தல் நேர்மையில் இலங்கையின் முன்னேற்றம் மிகுந்த நம்பிக்கை தருவதாக இருக்கிறது. ஜனநாயகம் எப்போதுமே தொடர்ந்து முன்னேறிச் செல்லும் செயன்முறை என்பதையும் இது நினைவுபடுத்துகிறது. அரித்துச் செல்லப்படக்கூடிய ஆபத்தைக் கொண்டது என்பதால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தொடர்ச்சியாக போராடிக் கொண்டேயிருக்க வேண்டியது அவசியம்.

அதனால், இந்த தேர்தல்களின் விளைவாக ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை வலுப்படுத்தப்படுவது உற்சாகம் தருகிறது. உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் வெளிப்படுத்தியிருக்கும் திருப்தி இலங்கையில் ஜனநாயகம் வலிமையானதாக இருக்கிறது என்பதன் அறிகுறியாகும். தங்களது மக்கள் ஆதரவில் சிலவகையான முன்னேற்றத்தை கண்டிருக்கும் சில அரசியல் கட்சிகள் எதிர்கால வாய்ப்புகள் குறித்து மீண்டும் நம்பிக்கையை கொண்டிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தியின் அதன் மையக்கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வும் இனிமேலும் அரசியல் சமுதாயத்தின் விளிம்பு நிலையில் இருப்பவை அல்ல என்பதையும் உள்ளூராட்சி தேர்தல்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இலங்கை பூராவும் பிரசன்னத்தைக் கொண்ட ஒரு பிரதான போக்கு அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி தன்னை நிறுவிக் கொண்டிருக்கிறது. மற்றைய எந்தவொரு அரசியல் கட்சியை விடவும் பெருமளவுக்கு மக்கள் ஆதரவைக் கொண்ட கட்சியாக அது வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதை பொதுத்தேர்தலில் காணக்கூடியதாக இருந்தது. நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களில் 21 மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி பெருப்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றியது. இந்த சாதனையை வேறு எந்தவொரு அரசியல் கட்சியும் ஒருபோதுமே செய்துகாட்டியதில்லை. இதேபோன்ற வெற்றியை மீண்டும் சாதித்துக் காட்டுவது என்பதும் ஒரு சவாலாகும். கடந்த வருடத்தைய தேசிய தேர்தல்களில் வெளிக்காட்டிய அளவில் இல்லை என்றாலும், தற்போதைய உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி அதன் நாடுதழுவிய பிரசன்னத்தை தக்கவைப்பதில் வெற்றிகண்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி கடந்த நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெற்ற 61 சதவீதமான வாக்குகளில் இருந்து உள்ளூராட்சி தேர்தல்களில் அதன் வாக்குகள் 43 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருப்பது கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது. இந்த வீழ்ச்சியை அரசாங்கத்தில் செல்வாக்கு குறைந்துகொண்டு வருவதன் ஒரு அறிகுறி என்று சிலர் வியாக்கியானம் செய்கிறார்கள். ஆனால், அத்தகைய ஒரு மதிப்பீடு அரசியல் மாற்றத்தின் பரந்த திசைமார்க்கத்தை கவனத்தில் எடுத்த ஒன்றாக இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியும் அதனுடன் சேர்ந்த கட்சிகளும் தேசிய அளவில் ஐந்து சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றன. தற்போது அவை 40 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கின்றன என்பது வாக்காளர்களின் விருப்பத்தெரிவுகளிலும் அரசியல் கலாசாரத்திலும் ஏற்பட்டிருக்கும் ஆழமான மாற்றத்தை பிரதிபலித்து நிற்கிறது. இந்த ஆதரவுத் தளத்தின் உறுதிப்பாடு மேலும் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். போட்டிக்கட்சிகள் சகலவற்றினதும் ஆதரவுத் தளங்களை மேவியதாக அது காணப்படுகிறது. உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகள் அதற்கு அடுத்ததாக வந்த போட்டிக்கட்சியின்



**வடக்கு, கிழக்கில் நியாயப்பாடுடைய சிறுபான்மைக் கட்சிகளுடன் ஊடாட்டங்களைச் செய்வதன் மூலமாக தேசிய மக்கள் சக்தி அதன் மையப்பண்புகளைச் சமரசம் செய்யாமல் கோட்பாட்டு அடிப்படையிலான ஆட்சிமுறையில் ஈடுபடமுடியும்.**

வாக்குகளின் இரண்டு மடங்காகும்.

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் இன முரண்நிலை மேற்பரப்புக்கு கீழே குமுறிக் கொண்டிருக்கிறது என்பற்கான எச்சரிக்கை சமிக்ஞையாகும். தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளே அந்த இரு மாகாணங்களிலும் பெரியளவில் வெற்றி பெற்றிருக்கின்றன. சிறுபான்மையின கட்சிகளின் வெற்றி இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் வாக்காளர்களின் வேறுபட்ட தேவைகளினதும் அபிலாசைகளினதும் அடையாளம் காட்டுகின்றது. அத்துடன் அந்த சமூகங்களுடன் மேலும் முழுமையான அளவுக்கு அரசாங்கம் ஊடாட்டங்களைச் செய்ய வேண்டிய தேவையையும் அது உணர்த்துகிறது.

வறுமை, அபிவிருத்தியின்மை, பொருளாதார வளங்களைப் பெறமுடியாமல் இருக்கின்றமை மற்றும் ஊழல் முறைகேடுகள் என்று நாட்டின் ஏனைய பாகங்களின் மக்களுக்கும் வடக்கு, கிழக்கு மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றுக்கு அப்பால் சனத்தொகையின் மற்றைய பிரிவினர்களுக்கு இல்லாத விசேடமான பிரச்சினைகள் வடக்கு, கிழக்கு மக்களுக்கு இருக்கின்றன.

குடிமக்களின் காணிகளில் இராணுவம் செய்திருக்கும் ஆக்கிரமிப்பு, காணாமல்போனோர் விவகாரம், எந்த விதமான விசாரணையும் இன்றியும் குற்றவாளிகளாகக் காணப்படாமலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்போர் விவகாரம், தாங்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற அவர்களின் நீண்டகாலக் கோரிக்கை ஆகியவை அந்த விடேமான பிரச்சினைகளில் அடங்குகின்றன.

இந்த நீண்டகால பிரச்சினைகளை அவசரமாகத் தீர்த்துவைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறியதால் வடக்கு, கிழக்கு வாக்காளர்கள் மத்தியில் [illegible] அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. [illegible] மாற்றம் நிச்சயமாக சிக்கலானது என்பதுடன் மெதுவாகவே முன்னெடுக்கப்படக்கூடியவை என்கிற அதேவேளை, தாமதங்களை குறிப்பாக, ஏற்கெனவே பாகுபாடுகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது பிரச்னைகளை தீர்த்துவைப்பதில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை என்றே அர்த்தப்படுத்துவார்கள்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு முக்கியமானவையாக இருக்கும் பிரச்சினைகளில் வெளிப்படையாகத் தெரியக் கூடிய முன்னேற்றம் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை தாங்கள் ஒதுக்கப்படுவதான உணர்வை அவர்கள் மத்தியில் வளர்ப்பதுடன் அரசியல் பிளவுகளையும் ஆழமாக்கும். என்றாலும் கூட, வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகள் ஒன்றும் முக்கியத்துவம் குறைந்தவை அல்ல என்பது கவனிக்கத்தக்கது. இன ரீதியான மனக்குறைகள் தொடர்பிலான அதன் செய்தியை தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தாத பின்புலத்தில் கூட இவ்வாறு அதற்கு வாக்குகள் கிடைத்திருக்கின்றன. சகல சமூகங்களுக்கும் பொதுவான நீதி, பொறுப்புக்கூறும் கடப்பாடு, அபிவிருத்தி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தேசிய சீர்திருத்த நோக்கு ஒன்றையே தேசிய மக்கள் சக்தி முன்வைத்திருக்கிறது.

தேர்தல் பயன்களை அர்த்தபுஷ்டியான ஆட்சிமுறையாக மாற்றுவதற்கு வெறுமனே சுலோகங்களை விடவும் கனதியான செயற்பாடுகள் அவசியம். அந்த பகுதிகளின் மக்களினால் முக்கியமானவை என்று நோக்கப்படுகின்ற விவகாரங்களை துரிதமாக கையாளுவதற்கு அரசாங்கம் தவறியதால் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால், அவ்வாறு இருந்தாலும் கூட, பிரச்சினைகளை சமநிலையுடனும் நியாய பூர்வமான முறையிலும் நோக்க வேண்டியது அவசியமானதாகும்.

வடக்கு, கிழக்கில் உள்ள ஏழு தேர்தல் மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைப் பெற்று முதலாவதாக வந்திருக்கிறது. மற்றைய ஐந்து மாவட்டங்களிலும் அது இரண்டாவதாக வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அந்த பகுதிகளில் கணிசமான வாக்குகளை தொடர்ந்தும் பெறக்கூடியதாக இருக்கின்ற நிலைவரம் அபிவிருத்தியில் ஒப்புரவு மற்றும் சமத்துவ உரிமைகள் தொடர்பிலான அதன் அணுகுமுறைக்கு அந்த மக்கள் மத்தியில் எடுபடுகிறது என்பதையே காட்டுகிறது. தமிழ்க்கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் தேசியவாத அல்லது இனத்துவ அடிப்படையில் வாக்களிக்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்ததற்கு மத்தியிலும் கூட, இந்தளவுக்கு வாக்குகளை தேசிய மக்கள் சக்தியினால் பெறக்கூடியதாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

வடக்கு, கிழக்கில் என்றாலும் சரி, அதற்கு வெளியில் என்றாலும் சரி, அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மந்தகதியில் செயற்படுகிறது என்றே நோக்கப்படுகிறது. முறைமை மாற்றத்தைக் கொண்டுவரப் போவதாக அளித்த வாக்குறுதியின் பின்புலத்தில் நோக்கும்போது பழைய முறைமையே தொடரவேண்டும் என்று விரும்புகின்ற தன்னல அக்கறைச் சக்திகள் அத்தகைய மாற்றம் ஒன்றை உறுதியாக எதிர்க்கும் என்பதை விளங்கிக் கொள்ளக் கடியதாக இருக்கிறது.

முறைமை மாற்றம் பெரும்பாலும் பல்வேறு மட்டங்களிலும் எதிர்க்கப்படும். ஆனால், தங்களது நலன்களில் அக்கறை இல்லாத காரணத்தினாலேயே மாற்றம் மந்தகதியிலானதாக இருக்கிறது என்று இன, மத சிறுபான்மைச் சமூகங்களினால் நோக்கப்படலாம். ஆனால், முறைமை மாற்றம் மந்தகதியில் இருப்பது வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல, முழு நாட்டிலுமே அது தான் நிலைமை.

கடந்த வருடம் நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தேசிய மக்கள் சக்தி முன்னென்றும் இல்லாத வகையிலான எண்ணிக்கையில் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆனால், மாற்றங்களைச் செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி அதன் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையை இன்னமும் பயன்படுத்தவில்லை. அந்த பிரமாண்டமான பெரும்பான்மை மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கத்தை அனுமதிக்கிறது.

339 உள்ளூராட்சி சபைகளில் 267 சபைகளை தேசிய மக்கள் சக்தி அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற போதிலும், பெரும்பாலான சபைகளில் தீர்க்கமான பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில், உள்ளூராட்சி மட்டத்தில் ஆட்சியைச் செய்யவிரும்பினால் அது கூட்டணியை அமைப்பதில் அல்லது கருத்தொருமிப்பைக் காண்பதில் இப்போது ஈடுபடவேண்டியது அவசியமாகும். ஆட்சிமுறையை விடவும் உயர் அதிகார வர்க்கத்தின்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடாவின் தமிழின படுகொலை நினைவுத்துாபி சர்வதேசத்துக்கு நின்றுகூறும் செய்தியும் உள்ளூராட்சிச் சபைகளை கையகப்படுத்த அநுர குமரவின் அதிகார ஆணவப் பேச்சும்!

பனங்காட்டான்

**இலங்கையில் இரண்டு தடவை பயங்கரவாதம் வழியாக ஆட்சியைக் கைப்பற்ற முனைந்து, இரண்டு தடவைகளும் தடைசெய்யப்பட்டு, சிங்கள அரசியல் கட்சிகளின் சீர்கேட்டினால் கிடைத்த இடைவெளியை பயன்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி தனது திட்டம் என்ன என்பதை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. இவைகள் முழுமையாக செயல்படுத்தப்படுமானால் இந்து சமுத்திரத்தின் குட்டித்தீவு தேர்தல்களற்ற, அரசியல் கட்சிகளற்ற, நவீன சோசலிஸ நாடாகலாம். யார் கண்டது?**

முள்ளிவாய்க்கால் படுகொலை வாரம் அதன் நினைவுக் காலமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியுடன் ஆரம்பமாகி, படுகொலையை சித்தரிக்கும் ஊர்தி பவனி நல்லூரிலிருந்து மாவட்டங்களூடாக முள்ளிவாய்க்காலை சென்றடைந்தது.

கடந்த ஒன்றரை தசாப்தத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு உயிரும் உணர்வும் ஊட்டுவதாக கனடாவின் பிராம்ரன் நகரில் கடந்த பத்தாம் திகதி திறந்து வைக்கப்பட்ட நினைவுத்துாபியும், அந்நிகழ்வில் பிராம்ரன் நகர மேயர் பற்றிக் பிரவுண் நிகழ்த்திய உள்ளார்ந்த உரையும் அமைந்ததென்று பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிராம்ரன் நகரசபை வழங்கிய பூங்காவில், அதற்குச் சொந்தமான நிலத்தில் இந்த நினைவுத்துாபி அமைக்கப்பட்டதும், அதன் அமைப்பும், அதில் சித்தரிக்கப்பட்டுள்ள தமிழீழ வரைபடமும், அங்கு பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களும் இதுவரை எந்தவொரு சர்வதேச மன்றிலும் நிறைவேற்றப்படாத தமிழினப் படுகொலையை நீண்டு நின்று சொல்லும் சாட்சியமாக அமைந்துள்ளது.

புலம்பெயர் நாடொன்றில் தமிழினப் படுகொலைக்கான நினைவுத்துாபி முதன்முதலாக கனடாவில் நிர்மாணிக்கப்பட்டது வரலாற்றுக்குரிய பதிவு. ‘இலங்கையில் தமிழினப் படுகொலை நடக்கவில்லையென்று எவராவது கூறினால் அவர்களுக்கு கனடாவில் இடம் இல்லை" என்று மேயர் பற்றிக் பிரவுண் கூறியது சிங்களவர்களுக்கானது மட்டுமல்ல. தமிழினப் படுகொலை இடம்பெறவில்லையென்று கூறிவரும் தமிழர்களுக்குமானது.

ஆனால், இந்த நினைவுத்துாபி அமைக்கப்பட்டதற்கு முதலில் கண்டனக் கவலை வெளியிட்டவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரான நாமல். தமது தந்தையின் தலைமையிலான ராஜபக்சக்களே தமிழினப் படுகொலையின் சூத்திரதாரிகள் என்பதாலும், இந்தப் படுகொலைகளுக்குச் சம்பந்தப்பட்ட ராஜபக்ச ஆட்சிக் கால படைத்துறை அதிகாரிகள் பலருக்கு வெளிநாடுகளில் தடை விதிக்கப்பட்டிருப்பதும் நாமல் ராஜபக்சவினால் ஏற்றுக்கொள்ள முடியாததை அவரது கவலை வெளிப்படுத்தியுள்ளது.

சிங்கள மக்களை தாஜா பண்ணவென அநுர தரப்பு கொழும்பிலுள்ள கனடிய தூதுவரை அழைத்து ஆட்சேபணையைத் தெரிவித்தது. இது ஒரு சம்பிரதாய பூர்வமான நிகழ்வென்று இரு தரப்புக்கும் தெரியும். அதனால் கொழும்பின் கவலையை செவிமடுத்த கனடிய தூதுவர் தமது இணையத்தளத்தில் அதனைப் பதிவிட்டதோடு கதையை முடித்துவிட்டார்.

கனடாவின் சமஷ்டி அரசமைப்பைத் தெரிந்தவர்களுக்கு இதுபற்றி விபரிக்கத் தேவையில்லை. இங்கு மாகாண அரசுகளும் மாநில அரசுகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் அன்றி சுயமாக இயங்கும் சுதந்திரம் கொண்டவை. உதாரணத்துக்கு 2021ம் ஆண்டு ஒன்ராறியோ மாகாண சபை நிறைவேற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழின அழிப்பு அறிவூட்டல் கிழமை - சட்டமூலம் 104ஐ குறிப்பிடலாம். ஒவ்வொரு வருடமும் மே மாதம் 12ம் திகதி முதல் 18 வரையான (முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு வாரம்) ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள கல்விச் சபைகளின் பாடசாலைகள் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பை நினைவுகூர இச்சட்டமூலம் வழிவகுத்தது.

இப்போது ரொறன்ரோவிலுள்ள 800 பாடசாலைகள் உட்பட இங்குள்ள யோர்க், பீல், டுர்ஹம், ஒட்டாவா கல்விச் சபைகளின் பாடசாலைகளும் இந்த வாரத்தை அனுஷ்டிக்கின்றன. ஒன்ராறியோவின் மிகப்பெரிய காவற்துறைச் சேவைகளில் ஒன்றான வாட்டர்லு பொலிஸ் பிரிவு இந்த வருடம் தமிழின அழிப்பு வாரத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரித்திருப்பதையும் குறிப்பிட வேண்டும்.




தமிழின அறிவூட்டல் சட்டத்தை ஒன்ராறியோ மாகாண சபையில் சகல அரசியல் கட்சிகளதும் ஏகோபித்த ஆதரவுடன் 2021ல் நிறைவேற்றியவர் விஜய் தணிகாசலம் என்ற மாகாண சபை உறுப்பினர். தற்போது இவர் மாகாண சபையில் ஓர் அமைச்சராக உள்ளார். இவரால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்துக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தனது கையாட்கள் மூலம் பல வழக்குகளை அடுத்தடுத்து தாக்கல் செய்தது. இறுதியில் உச்ச நீதிமன்றமே இந்த வழக்குகளை ரத்துச் செய்து மாகாண சபை தீர்மானத்தை வலுப்படுத்தியது.

இவ்வகையான சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைத் தமிழர் தங்கள் இனப்பிரச்சனைக்கான தீர்வாக கேட்டு வருகின்றனர். 2015ம் ஆண்டு வடமாகாண சபையில் இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதற்கு எதிராகக் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் நல்லாட்சிக் காலத்தில் ரணில் - மைத்திரியுடன் இணைந்து ஏக்க ராஜ்ய ஆட்சிமுறையை உருவாக்க முனைந்தவர் என்பதை இங்கு நினைவுக்குட்படுத்துவது அவசியமாகிறது.

தமிழின படுகொலை வாரம் ஒருபுறத்தே உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்க அதன் அடையாளமான முள்ளிவாய்க்கால் கஞ்சி தமிழர் வாழும் இடமெங்கும் வழங்கப்பட்டது. சமவேளையில், அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அல்லது வெற்றி பெற்ற எந்தவொரு அணியும் இதுவரை பதவியேற்காத அவல நிலையையும் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசு கட்சிக்கே கூடுதலான வெற்றி கிடைத்தது. வடக்கில் இரண்டாவது இடத்தில் அநுர குமர அணி வெற்றி பெற்றது. இங்கு அடுத்தடுத்த இடங்களை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய பேரவையும், சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் வெற்றி பெற்றன. தெற்கில் பெரும்பாலான சபைகளை அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி வெற்றி கொண்டது. ஆனால், எந்தவொரு சபையிலும் சிறுகட்சிகளின் ஆதரவின்றி அறுதிப் பெரும்பான்மையை பெறமுடியாத நிலை காணப்படுவதால் இணக்கப் பேச்சு வார்த்தைகளும், கூட்டுச் சபைகள் அமைப் பதும் பேசப்பட்டு வருகிறது.

தமிழரசு கட்சியின் வெற்றி அதனை இரண்டாகப் பிளவுபடுத்தியுள்ளது. கிளிநொச்சியின் குட்டி மன்னரான அதன் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இங்குள்ள மூன்று சபைகளதும் தவிசாளர், உபதவிசாளர் தெரிவு நடத்தி பட்டியலை கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் வழங்கிவிட்டார். யாழ்ப்பாண பிரதேசத்துக்கு பொறுப்பாகவிருந்த சுமந்திரன் இன்னமும் மற்றைய கட்சிகளுடன் பேச்சு நடத்திக் கொண்டேயிருக்கிறார். உருப்படியான எந்த முடிவையும் இது வரை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால், முடிவுகள் எட்டப்பட்டது போன்ற பாணியில் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னர் இருந்தபோது தமிழரசு கட்சியை முதன்மைப்படுத்தி நிர்வகித்தது போன்று இப்போதும் மற்றைய கட்சிகளை நடத்தும் பாணியால் நிலைமை சாண் ஏற முழம் சறுக்குவது போன்று காணப்படுகிறது. தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகக் கருதியதாலேயே தமிழ் தேசியம் என்ற பெயரோடு போட்டியிட்ட மூன்று அணிகளுக்கும் வாக்குகளை இட்டார்கள். இவர்கள் தொடர்ந்து கட்சி அடிப்படையில் இயங்காது ஒன்றாக இணைந்து ஆட்சியமைத்தால் மட்டுமே அது தமிழ்த் தேசமாக முடியும் என்ற எதிர்பார்ப்பினாலேயே ஒரு கட்சிக்கே வாக்குகளை வழங்காது மூன்றுக்கும் பிரித்து வழங்கினார்கள். இதனைப் புரிந்து கொள்ளாத தமிழரசுக் கட்சி முன்னர்போல தங்களை மூப்பனாக வைத்து ஏற்படுத்த முனையும் இணைப்பு மக்களின் எதிர்பார்ப்புக்கு தடையாகவுள்ளது.

ஏறத்தாழ இதேபோன்ற ஒரு நிலைமையையே தெற்கிலும் காணமுடிகிறது. பெரும்பாலான சபைகளில் அநுர குமர அணி வெற்றி பெற்றிருந்தாலும், மற்றைய அணிகள் சிறுசிறு குழுக்களாக பெற்ற வாக்குகள் ஆட்சியமைப்பை தடுத்து வருகின்றன. இதனால் சினம் கொண்ட அநுர குமர தாம் இன்னும் முன்னைய ஜே.வி.பி. என்ற எண்ணத்தில் மனம் போன போக்கில் எச்சரிக்கைகளை விடுக்கிறார்.

ஆட்சி அமைப்பதற்கு மொத்தமாக வாக்குகளைப் பெறாத சிறிய கட்சிகளும் அணிகளும் கூட்டிணைந்து ஆட்சியமைப்பதை ஜனநாயக விரோதமென வர்ணிக்கும் இவர், தேவைப்படின் தங்கள் வசமுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்ற முடியும் என்ற பாணியில் பயமுறுத்தியுள்ளார். இவரது தாய்க்கட்சியான ஜே.வி.பி.யின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே இந்தக் கர்ச்சனை வந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிலிருந்து ரணில் விக்கிரமசிங்க வரை ஜனாதிபதியாக இருந்தவர்கள் அந்தக் கதிரையால் கிடைத்த ஆணவத்தில் எதனையெல்லாம் செய்தார்களோ அவற்றின் பக்கம் அநுரவின் பார்வையும் திரும்பியுள்ளது. மக்களின் வாக்குப்பலம் பெறாத சிறிய

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் கூட்டு சேர்வது சுலபம், தக்க வைப்பது கடினம்!

ச. வி. கிருபாகரன்,
(பிரான்ஸ்)

“ஒற்றுமை உண்மையானதாக இருக்க வேண்டுமென்றால், அது மிகக் கடுமையான அழுத்தத்தைத் தாங்கி நிற்க வேண்டும்.” - மகாத்மா காந்தி

ஈழத்தமிழர்களது தாயாகபூமியான வடக்கு கிழக்கு இன்று மிகவும் பரிதாப நிலைக்கு செல்லுமென எமது முன்னேடிகள் யாரும் கானவாக கூட கண்டிருக்க மாட்டார்கள். தந்தை செல்வா, இன்று மோச்சத்திலோ எங்கு இருந்தாலும், எமது பரம்பரை, எமது வாரீசுகளை இன்று அரசியல் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்களென வாழ்க்கையில் ஊகித்திருக்க மாட்டார். இன்று எமது நிலைக்கு அரசியல்வாதிகள் அல்லாத தேர்தல்வாதிகளே முக்கிய காரணம்.

கடந்த பதினைந்து (15) வருடங்காள நாம் என்ன செய்தோம் என்பதே இன்றைய கேள்வி? எமது சில அரசியல்வாதிகள் விசேடமாக ஒற்றையாட்சிக்கு வெளியில் ஏதோ அரசியல் தீர்வு பெற்று தர போகிறார்களாம்! இது யாரிடமிருந்து என்ற கேள்விக்கு பதிலை கூறிய பின்னர், மக்களிற்கு ‘தண்ணீர்’ காட்டும் பிரச்சாரத்தை தொடருங்கள்.

எதிர் கருத்து கூறுபவன் யாவரும் எதிரி அல்ல என்பதுடன், யாதார்த்தம் வேறு, விருப்பு வேறு என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதேவேளை, தென் ஆபிரிக்காவின் மாபெரும் தலைவன், காலம்சென்ற நெல்சன் மண்டலா அவர்கள், அமெரிக்காவிற்கு சென்ற சமயம், அவரிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, அவர் கூறிய பதிலை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். “சில அரசியல் ஆய்வாளர்கள் செய்யும் தவறுகளில் ஒன்று, அவர்களின் எதிரிகள் நமது எதிரிகளாக இருக்க வேண்டும் என்று நினைப்பதுவென” மண்டலா கூறியிருந்தார், என கூறி கொண்டு தொடர்கிறேன்.


1944ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இன்று எத்தனையாவது தடவை, கூட்டு சேர்ந்துள்ளது? முதலில் தமிழர் விடுதலை கூட்டணி, அடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு, இதனை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்ணனி, இன்று சையிக்கில் கட்சி என்ற பெயரில் தமிழ் பேரவை. இவர்கள் செய்வதை ஆராய்ந்தால் யாவும் ‘தேர்தல்,’ ‘தலைமைத்துவம்’ ஆகியவற்றை அடிப்படையாக கொண்டதாகவே காணப்பட்டதை தவிர, கடந்த எட்டு தசாப்தங்களிற்கு மேலாக, வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு ஒன்றும் உருப்படியாக செய்ததாக சரித்திரம் கிடையாது.

இங்கு முக்கிய கேள்வி என்னவெனில், இவர்கள் தமிழ் பேரவை என்ற பெயரில் கூட்டமைப்பு சேர்ந்தும் இரு பிரதேச சபைகளில் மட்டும், கூடுதலான வட்டாரங்கள் பெற்றுள்ளார்கள். ஆனால் வடக்கு கிழக்கில், மாவட்ட ரீதியாக எந்த மாவட்டத்திலும் குறிப்பிடுமளவிற்கு இவர்கள் வெற்றி பெறவில்லை.

நாம் இங்கு கவனித்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், வல்வெட்டிதுறையை பூர்வீகமாக கொண்ட மண்ணின் மைந்தன் சிவஜிலிங்கத்திற்கு, இந்த தமிழ் பேரவையின் கூட்டு இல்லாமலே வல்வெட்டிதுறையில் வெற்றியீட்டியிருக்க முடியும். வல்வெட்டிதுறை என்பது விடுதலை போராட்டத்திற்கு முன்பிருந்தே, மிக நீண்ட காலமாக அவ் மக்கள் பின்னி பிணைந்து - தமது மொழி, கலை கலாச்சம், ஊரை நேசிப்பவர்கள்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - க.பொ. இன்று சிந்திப்பது போல், 2010ம் ஆண்டு முதல் சிந்தித்திருந்தால், ‘ஒற்றுமை’ ‘தமிழ் தேசியம்’, ‘ஒற்றையாட்சிக்கு வெளியில்’ என்ற விடயங்கள் அர்த்தமுள்ளதாக இருந்திருக்கும். இன்று வெள்ளம் வந்த பின்னர், பதினைந்து வருடங்களை நாசமாக்கி யாருடனும், ஒற்றுமையாக இணைய மறுத்த கொள்கையை கொண்டு பயணித்தது, யாவரையும் யாவற்றையும் பலமிழக்க காரணமாக்கிய நிலையில், இன்றைய கூட்டு யாருக்கு? தினமும் ஒற்றையாட்சிக்கு வெளியில் தீர்வு பற்றி பேசும் க.பொ. 2020ம் ஆண்டு பாரளுமன்ற தேர்தலில் தமக்கு கிடைத்த தேசிய பட்டியலிற்கான உறுப்பினரை, யாழ் மாவட்டத்திற்குள் அடக்கியவர். அப்படியானால் இவர் கூறும் ஒற்றையாட்சிக்கு வெளியிலான தீர்வு யாழ் மாவட்டத்திற்கு மட்டுமா உரியது?

இன்று உருவாக்கப்பட்ட, தமிழ் பேரவை என்பது ‘எதிரிக்கு எதிரிக்கு எமது நண்பர்’ என்ற அடிப்படையில் கூடிய ஒன்று. ஆகையால் உண்மையில் இவர்களது அரசியல் கொள்கை என்ன என்பதை முதலில் மக்களிற்கு தெளிவுபடுத்த வேண்டும். இன்றைய ஈழத்தமிழர்களது, அரசியல் கொள்கை என்பது மூன்று பிரிவாக காணப்படுகிறது.



ஒன்று ‘தமிழரசு கட்சி’ என்பது, அன்றிலிருந்து இன்று வரை, கட்சிக்குள் பல தில்லு முல்லு, வழக்குகள் காணப்பட்டாலும், அவர்களது கொள்கை மிக நீண்ட காலமாக ஒன்றாகவே காணப்படுகிறது.

இரண்டாவது, ஆயுத போராட்டம் மூலம் தமிழீழ ஆட்சியை நிலைநாட்ட போராடியவர்கள். இவர்கள் 1987வது ஆண்டு முதல், இலங்கை இந்தியா உடன்படிக்கை மூலம் உருவாகிய 13வது திருத்தத்தை ஏற்று, ஆயுத போராட்டத்தை கைவிட்டு, சிறிலங்கா அரசுகளின் வார்த்தைகளில் - ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்தவர்கள். ஆனால் 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் பலவிதப்பட்ட கூட்டு கூட்மைப்பு என நிலைமாறி கொண்டிருந்தவர்கள், தற்பொழுது “சூடு கண்ட பூனை அடுப்பைத் தாண்டாது” என்பது போல், தமக்குள்ளேயே கூட்டு சேர்ந்துள்ளனர்.

மூன்றவதாக ‘எதிரியின் எதிரி எனது நண்பர்’என்ற கொள்கையுடன் உருவாகியுள்ள தமிழ் பேரவை. இங்கு தமிழ் காங்கிரஸ் அல்லது தமிழ் மக்கள் தேசிய முன்னனி தவிர்ந்த மற்றைய யாவரும், 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் 13வது திருத்த சட்டத்தை முழுதாக பெற்று கொள்வதற்காக போராடி வருபவர்கள். இவ் அடிப்படையில், கடந்த உள்ளூராட்சி தேர்தல்களில் யார் உண்மையை யாதார்த்தை பேசினார்கள் என்ற கேள்வி இங்கு எழுகிறது.

தமிழ் காங்கிரஸ் அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதம கர்த்தவான க.பொ. கூறியது போல், தமிழ் பேராவையில் இணைந்தவர்கள் யாவரும் க.பொ.ஙின் ஒற்றையாட்சிக்கு வெளியிலான, இவர்களது செயற்பாட்டிற்கு அமைய, யாழ் மாவட்டத்திற்கான கொள்கையை ஏற்று, இணைந்துள்ளார்களா என்பதே இன்றைய கேள்வி? அல்லது இது உள்ளூர் ஆட்சிக்கான தேர்தலிற்கான கூட்டமைப்பா? அதாவது சிங்கள பௌத்த பின்னணிகளை கொண்ட கட்சிகள் வடக்கு கிழக்கில் வெற்றி பெறப்படாது என்ற காரணியுடன், தமிழரசு கட்சியின் பிரதம கர்த்தவாகவுள்ள எம். ஏ. சுமந்திரனிற்கு ஓர் பாடம் புகட்ட வேண்டும் என்ற அடிப்படையில் இணைந்தவர்களா? மக்களிற்கு அரசியல் அவதானிகளிற்கு இந்த மூன்றாவது அணி பற்றிய பல பரிய கேள்விகள் உண்டு.

எது எப்படியாக இருந்தாலும், கடந்த உள்ளூராட்சி தேர்தலில், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் அவர்களது தமிழ் பேரவையில் கூட்டு சோர்ந்தவர்களது வாக்குகளை கூட்டி பார்க்கும் பொழுது, தமிழ் பேரவைக்கு பாரளுமன்ற தேர்தலில் கிடைத்த வாக்குகளை விட மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆகையால் இவர்கள் தமிழ் பேரவையாக கூட்டு சேர்ந்ததினால், என்ன பலனை கண்டுள்ளார்கள்?

மிக அண்மையில், ஓர் ஆய்வாளர் ஊடகத்திற்கு கூறிய கருத்திற்கு அமைய, இவ் தமிழ் பேரவையில் கூட்டு சேர்ந்த கட்சியில் ஒன்று, தாம் தேர்தலில் நிற்க முடியாத வட்டாரங்களில், “வீட்டிற்கு” வாக்களியுங்களென கூறியதாக கூறியுள்ளார். ஆகையால் இவ் பேரவையின், அரசியல் கொள்கை என்ன? இலட்சியத்தை அடைவதற்கான மாற்று வழிகளான 13வது திருத்த சட்டத்தை ஏற்று கொள்வீர்களா? போன்ற விடயங்களை மக்களிற்கு தெளிவுபடுத்திய பின்னர், தேர்தல்வாதிகளாகிய நீங்கள், அடுத்து நடக்ககூடிய மாகாண சபைக்கான தேர்தலிற்கான ஆயுத்தங்களை ஆரம்பியுங்கள்.

இதற்குள் இன்னும் ஓர் முக்கியமான காரணமும் உண்டு. 2010ம் ஆண்டு முதல் தமிழ் தேசிய கூட்டமைப்பை பிள்ளையார் சுழி போட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரித்த க.பொ., வாய்க்கு வந்த விதமாக திட்டி தீர்த்தவர்கள், கடந்த உள்ளூராட்சி தேர்தலில், தமிழ் நாட்டு அரசியல்வாதிகளை மிஞ்சியவர்கள் போல், சில மேடைகளில் “தம்பி கஜேந்திரனை” நிமிடத்திற்கு நிமிடம் புகழ்வதை பலரும் கண்டு அதிசயித்தார்கள். இவை யாவும் இவர்களது இதயத்திலிருந்து உதிர்ந்தவையா அல்லது எலும்பற்ற நாக்கிலிருந்து வந்தவையா என்பது அறியாத புதிராகவுள்ளது. தமிழ் பேரவையில் உள்ளவர்கள் யாவரும், உண்மையில் கொள்கைவாதிகளா என எண்ண தோன்றுகிறது.

இதே இடத்தில் தமிழரசு கட்சியின் வாக்கு வீதம் என்பது, கடந்த பாரளுமன்ற தேர்தலில் கிடைத்ததிற்கு மேலாக காணப்படுகிறது என்பதை யாரும் மறுதலிக்க முடியாது.

இதை ஏற்க தவறியவர்கள் யாராக இருந்தாலும், கடந்த பாரளுமன்ற தேர்தலில் சகல கட்சிகளிற்கும் கிடைத்த வாக்குகளை கூட்டி கழித்து பார்த்து உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

அடுத்து தமிழரசு கட்சியின் வெற்றி, சுமந்திரனின் வெற்றியா? மாறாக தமிழ் பேரவைக்கு கிடைத்த வாக்குகள் க.பொ.த்திற்கு கிடைத்த வாக்குகளா? என்ற யாதார்த்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த பாரளுமன்ற தேர்தலில், க.பொ.த்திற்கும், சுமந்திரனிற்கும் இடையில் ஓர் சிறிய வாக்கு வித்தியாசங்களே காணப்பட்டது. ஒரு அரசியல் கட்சியில் ஒருவரை சுட்டிகாட்டி அந்த நபரை ஓர் கதாநாயகனாக காட்டுவது, கட்சிகளிற்கும் தமிழ் தேசியத்திற்கும் புத்தியான விடயமல்லா.

என்னை பொறுத்த வரையில் எந்த அரசியல் கட்சியையும் ஆதரிப்பவன் அல்ல. ஆனால் தமிழரசு கட்சிக்கு எதிராக இயங்கும் யாவரிடம் ஓர் முக்கிய கேள்வியை கேட்க விரும்புகிறேன். உங்கள் வீட்டிற்குள், எதிர்பாராவிதமாக ஓர் பாம்பு நுழைந்து விட்டால், நீங்கள் அந்த பாம்பை உங்கள் திறமைகளை பாவித்து துரத்துவதற்கு முனைவீர்களா? அல்லது உங்கள் வீட்டிற்குள் புகுத்த பாம்பிற்காக உங்கள் வீட்டை கொழுத்த முனைவீர்களா?

கிளிநொச்சியில் தமிழரசுகட்சியின் மாபெரும் வெற்றி என்பது, கிளிநொச்சியின் முடிசூடா மன்னனாக விளங்கும் சிறிதரனின் செல்வாக்கில் நடந்தெறிய காரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படியான சிறிதரனிற்கு, கடந்த தேர்தலின் தோல்வியுற்றோர், அவரின் பாரளுமன்ற உறுப்பினர் பதவியை பறித்து, தாங்கள் பாரளுமன்றம் செல்வதற்காக, மிக அநாகரிகமாக செயல்படுவதை மக்கள் அவதானமாக கண்காணித்து கொண்டிருக்கிறார்கள்.

இவ் பெயர்வழிகள், கட்சிக்குள் மட்டும் வழக்குகள் போடும் திறமையை கைவிட்டு, எம்மை போன்று சிங்கள பௌத்த அரசிற்கு சவலான விடயங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்வதையே மக்கள் விரும்புகிறார்கள்.

ஜேவிபி- என்பிபியின் என்பது புரட்சிகார வர்க்க போராட்ட கொள்கையை அடிப்படை கொண்ட அமைப்பு. இதே இடத்தில் தமிழீழ விடுதலை புலிகள் என்பது ஓர் தேசிய விடுதலை அமைப்பு. அதாவது 1977ம் ஆண்டு பாரளுமன்ற தேர்தலில் மக்கள் ஜனநாயக ரீதியாக தமிழ் சுயநிர்ணய உரிமைக்கு கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில், ஆயுத போராட்டத்தை மேற்கொண்ட அமைப்பு. இவ் வித்தியாசங்களை அறியாத தேர்தல் வாதி, தனக்கு அறிந்த புரிந்த அரசியல் அறிவிற்கு அமைய, இரு வேறுபட்ட அணுகுமுறைகளை கொண்ட அமைப்புக்களை, ஒரே தராசில் போட்டு, மக்களை குழப்புவது வெட்கபட வேண்டியதுடன், கண்டிக்கபட வேண்டிய விடயம். இவ் அணுகுமுறை என்பது, மறைமுகமாக ஜேவிபி-என்பிபிக்கு அங்கீகரமும் ஆதரவும் வழங்குவதற்கு சமமானவை.

2025ம் ஆண்டின் தமிழ் அரசியல் என்பது, சுமந்திரனின் 2010ம் ஆண்டு கனவிற்கும், க.பொ.ற்கு 2010ம் ஆண்டு ஏற்பட்ட மன அளுத்தத்திற்கும் நல்ல பலன்களை கொடுத்துள்ளது. சுமந்திரன் தான் தமிழரசு கட்சியை முற்றாக கைப்பற்றி, தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற கனவு இன்று வெற்றியாக நிறைவேறியுள்ளது. இதே வேளை, சுமந்திரன் தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட்மைப்பில் இணைந்ததால், தனது தலைமை பதவிக்கான கனவு பறிபோய்விட்டதாக மன அளுத்தத்தில் இருந்த க.பொ. கனவு, ஒரு சில தமிழ் கட்சிகளின் ஆதரவுடன், தமிழ் பேராவையின் தலைவர் பதவி இன்று கிடைத்துள்ளது. ஆனால் தமிழ் பேராவையின் தேன் நிலவு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பது கேள்வி குறியான விடயம், காரணங்கள் பல.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமகவில் தந்தை - மகன் மோதல்!

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

## ராமதாஸின் கூட்டத்தைப் புறக்கணித்த நிர்வாகிகள்: அன்புமணி ராமதாஸ் பின்னால் திரளும் கட்சி?

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் எஸ். ராமதாஸ் கூட்டிய கூட்டத்தை அக்கட்சியின் பெரும்பாலான மாவட்டச் செயலாளர்கள் புறக்கணித்துள்ளனர். இது கட்சியின் பெரும் பகுதி அன்புமணி ராமதாஸ் பின்னால் திரள்வதை குறிக்கிறதா?

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் எஸ். ராமதாஸ் கடந்த வெள்ளிக்கிழமையன்று (மே 16) கூட்டியிருந்த கட்சியின் மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பெரும்பாலான மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கவில்லை.

ஏற்கனவே டாக்டர் ராமதாஸிற்கும் அவரது மகனும் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான அன்புமணிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்த நிலையில், ராமதாஸ் கூட்டிய கூட்டத்தை பலர் புறக்கணித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

வெள்ளிக்கிழமையன்று காலை பத்து மணியளவில் கட்சியின் மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை தைலாபுரம் தோட்டத்தில் கூட்டுவதாகும் அதில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென்றும் மே 15ஆம் தேதியன்று ஃபேஸ்புக் பதிவின் மூலம் அறிவித்திருந்தார் டாக்டர் ராமதாஸ்.

இந்தப் பதிவின் மூலம் 250க்கும் மேற்பட்டோருக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கப்பட்டாலும் அந்தக் கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர்கள், மாவட்டத் தலைவர்கள் மட்டத்திலான முக்கிய நிர்வாகிகளில் சுமார் 15 பேர் மட்டுமே வந்திருந்தனர்.

அக்கட்சிக்கு ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில், கட்சியின் கௌரவத் தலைவர் ஜி.கே. மணி, ரா. அருள் ஆகிய இருவர் மட்டுமே பங்கேற்றனர்.

பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன், முன்னாள் எம்.எல்.ஏ. மேகநாதன் உள்ளிட்ட சுமார் 50 பேர் மட்டும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். அன்புமணி ராமதாஸ் இந்தக் கூட்டத்திற்கு வரவில்லை.

சுமார் பத்து மணியளவில் கூட்டத்திற்கு வந்த டாக்டர் ராமதாஸ், செய்தியாளர்களிடம் பேசினார்.

பெரும்பாலானவர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லையே எனச் செய்தியாளர்கள் கேட்டபோது, 'மாநாட்டுப் பணிகளால் களைப்போடு இருப்பதால் சிலர் கூட்டத்துக்கு வரவில்லை. சிலர் என்னை தொலைபேசியில் அழைத்து காரணம் சொன்னார்கள். கூட்டத்தை புறக்கணித்தவர்கள் மீது நடவடிக்கை தேவையில்லை. கூட்டத்தில் பங்கேற்க செயல் தலைவர் அன்புமணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அன்புமணி வரலாம், வந்து கொண்டிருக்கலாம். எப்படி படுத்துக்கொண்டே 50 தொகுதிகளில் ஜெயிப்பது என்கிற வித்தையை மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், சொல்லிக் கொடுத்திருக்கிறேன்" என்று தெரிவித்தார்.

மேலும், தான் இன்னும் தீவிரமாகச் செயல்படுவதைக் குறிக்கும் வகையில், 'சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைவதில்லை என்பார்கள். ஆனால், சிங்கத்தின் கால்கள் பழுதுபடவேயில்லை' என்றும் தெரிவித்தார் ராமதாஸ்.

பாட்டாளி மக்கள் கட்சியில் அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸிற்கும் அவரது மகனும் செயல் தலைவருமான அன்புமணி ராமதாஸிற்கும் இடையிலான மோதலின் மற்றொரு வெளிப்பாடாகவே இந்த நிகழ்வு பார்க்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பட்டானூரில் கடந்தாண்டு டிசம்பர் 28 ஆம் தேதி நடைபெற்ற பா.ம.கவின் சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில், தன்னுடைய மகள் வழி பேரனான முகுந்தன் பரசுராமனை கட்சியின் இளைஞரணித் தலைவராக அறிவித்தார் ராமதாஸ். இந்த அறிவிப்பிற்கு அந்த மேடையிலேயே தனது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்தார் அன்புமணி ராமதாஸ்.

இதையடுத்து, 'கட்சியில் யாராக இருந்தாலும் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்கவில்லையென்றால் கட்சியிலேயே நீடிக்க முடியாது' எனக் கூறினார் ராமதாஸ்.

**2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருக்கும் நிலையில்தான் பாட்டாளி மக்கள் கட்சிக்குள் தந்தை - மகன் இடையிலான முரண்பாடுகள் வெடித்துள்ளன.**



அதற்கு சில தினங்கள் கழித்து 'எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடுகளும் இல்லை, கட்சிப் பிரச்னைகளை பேசி சரிசெய்துவிட்டோம்" என ராமதாஸ் தெரிவித்தார்.

ஆனால், அடுத்த சில நாட்களில் கள்ளக்குறிச்சி, கடலூர், விழுப்புரம், தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், செங்கல்பட்டு என பல்வேறு மாவட்டங்களின் செயலாளர்களுடன் பனையூரில் உள்ள தனது அலுவலகத்தில் அன்புமணி ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில்தான் ஏப்ரல் பத்தாம் தேதி தைலாபுரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த டாக்டர் ராமதாஸ், 'இனி பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் நான்தான். அன்புமணி ராமதாஸ் கட்சியில் செயல் தலைவராகச் செயல்படுவார்' என்று அறிவித்தார். அடுத்த நாள், அதாவது ஏப்ரல் 11ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சென்னை வரவிருந்த நிலையில், ராமதாஸ் இந்த அறிவிப்பைச் செய்ததால், பா.ஜ.கவுடன் கூட்டணியை இறுதி செய்ய அன்புமணி முயன்ற நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஊகங்கள் கிளம்பின.

இது குறித்து கட்சியிலிருந்து யாரும் தெளிவான விளக்கத்தை அளிக்காத நிலையில், தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான மோதல் தீரவில்லை என்பது மட்டும் தெளிவாகப் புலப்பட்டது.

இந்நிலையில், கடந்த மே 11ஆம் தேதி சென்னைக்கு அருகில் உள்ள திருவிடந்தையில் வன்னியர் சங்கத்தின் சார்பில் சித்திரை முழுநிலவு இளைஞர் பெருவிழா மாநாடு நடத்தப்பட்டது. ராமதாஸிற்கும் அன்புமணி ராமதாஸிற்கும் இடையில் மோதல் வெடித்த பிறகு நடக்கும் முதல் மிகப் பெரிய பொது நிகழ்வு என்பதால் இந்த மாநாடு குறித்து பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

முகுந்தனின் கையைப் பிடித்துக் கொண்டு மாநாட்டிற்கு வந்த ராமதாஸ், இந்த மாநாட்டில் பேசிய பேச்சு அதிரடியாக இருந்தது.

'நான் தனியா கட்சி ஆரம்பிச்சப்போ யானைச் சின்னத்தில் போட்டியிட்டு நான்கு தொகுதிகளில் ஜெயித்தோம். இப்போது கூட்டணியில் இருந்தும் ஐந்து தொகுதிகளில்தான் ஜெயிக்க முடிகிறது. இது அவமானம். பொறுப்பாளர்கள் கட்சிக்காக வேலை செய்வதில்லை. அவர்கள் வெவ்வேறு வேலைகளைப் பார்க்கிறார்கள்.

இனியும் அப்படி இருந்தால் உங்கள் பொறுப்பு உங்களிடம் இருக்காது. எந்த திசைக்குப் போய் காக்காப் புடுச்சாலும் ஒன்னும் நடக்காது. கட்சிக்குள்ளேயே கூட்டணி, கூட்டு எல்லாம் இனி நடக்காது தம்பி, நடக்காது கண்ணு. நீ உன்னைத் திருத்திக்கொள். இல்லையென்றால் உங்களை மாற்ற ஒருவன் வருவான். அவனை நானே கொண்டுவருவேன்" என்று பேசினார்.

அவரது இந்தப் பேச்சு, கட்சிக்குள் இப்போதும் ஏதும் சுமுகமாகவில்லை என்பதை சுட்டிக்காட்டுவதைப் போலத்தான் இருந்தது. இந்த நிலையில்தான், மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டுவதாக ஃபேஸ்புக் மூலம் அறிவித்தார் ராமதாஸ்.

பா.ம.கவைப் பொறுத்தவரை இந்த விவகாரம் குறித்துப் பேசுவதையே தவிர்க்க விரும்புகின்றனர்.

கட்சியின் மாநிலப் பொருளாளர் திலகபாமாவிடம் கேட்டபோது, 'இதுவரை பல மாவட்டச் செயலாளர்கள், மாவட்டத் தலைவர்கள் கூட்டத்தை நடத்தியிருக்கிறோம். அப்போதெல்லாம் அது குறித்து ஒரு சிறிய செய்தியைக்கூட யாரும் வெளியிட்டதில்லை. இப்போது மட்டும் ஏன் கேட்கிறீர்கள்? இன்று நடந்ததுபோன்ற கூட்டங்கள் அவ்வப்போது நடப்பதுதான். இதில் சொல்வதற்கு ஏதுமில்லை' என்றார்.

பெயரைத் தெரிவிக்க விரும்பாமல் பேசிய மூத்த நிர்வாகி ஒருவர் 'பெரியவர் மீது எங்களுக்கு மிகுந்த மரியாதை இருக்கிறது. ஆனால், இப்படித் தடாலடியாக வெளிப்படையாகப் பேசினால் கட்சியினருக்குத்தான் சிக்கல். இந்நிலையில், நாங்கள் எதையும் சொல்ல விரும்பவில்லை" என்கிறார்.

யாருடன் கூட்டணி வைப்பது என்பதில் ராமதாஸுக்கும் அன்புமணிக்கும் மோதல் என்பதைப்போல சிலர் கருதினாலும், ராமதாஸின் குடும்பத்திற்குள் இருக்கும் அழுத்தம்தான் பிரச்னைக்குக் காரணம் என்கிறார்கள் மூத்த பத்திரிகையாளர்கள்.

'சமீபத்தில் நடந்து முடிந்த மாநாட்டின் வெற்றிக்கு காரணமே, அன்புமணி ராமதாஸ்தான். மூன்று மாதங்களாக இந்த மாநாட்டிற்காகக் கடுமையாக உழைத்தார். ஆனால், மாநாட்டில் பேசிய ராமதாஸ், அன்புமணியைப் பாராட்டி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மாறாக, அதிகாரம் முழுக்க தன்னிடமே இருக்கிறது என்று காண்பிப்பதிலேயே குறியாக இருந்தார்.

ராமதாஸின் குடும்பத்தில், அன்புமணியின் குடும்பத்தைத் தவிர்த்து வேறு சிலருக்கும் அரசியல் ஆர்வம் இருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் மகள் வழிப் பேரனான முகுந்தனின் நியமனம். ஆனால், கட்சி அன்புமணியைத் தாண்டி ராமதாஸிடம் வருவது நடக்குமெனத் தோன்றவில்லை" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான ப்ரியன்.

மூத்த பத்திரிகையாளரான கார்த்திகேயனும் இதே கருத்தையே எதிரொலிக்கிறார்.

'இந்தப் பிரச்னைக்குப் பின்னால் கூட்டணி, சித்தாந்தம் போன்றவை இருப்பது போலத் தெரியவில்லை. இது தந்தை - மகன் இடையிலான மோதலாகத்தான் தெரிகிறது. சித்திரை முழு நிலவு மாநாடு கட்சியின் வலிமையைக் காட்ட நடத்தப்படும் ஒரு மாநாடு. ஆனால், அந்த மாநாடே தந்தை - மகன் இடையிலான மோதலைக் காட்டும் மாநாடாக முடிவடைந்திருப்பது தொண்டர்களைச் சோர்வடையச் செய்திருக்கிறது.

மேலும், பா.ம.கவுடன் கூட்டணி வைப்பவர்கள் யாருடன் பேச வேண்டும் என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. கட்சி இத்தனை ஆண்டுகளாக அன்புமணி ராமதாஸின் வழிகாட்டுதலில் தான் நடந்திருக்கிறது. அதில் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறது. அதைச் சரி செய்ய ராமதாஸ் விரும்பலாம். ஆனால், இப்படி வெளிப்படையாக அன்புமணியை ஓரங்கட்டுவதுபோலக் காட்டுவது கட்சியை மேலும் பலவீனப்படுத்தும்" என்கிறார் அவர்.

கார்த்திகேயன் சொல்வதைப் போல 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு பா.ம.க தொடர் பின்னடைவுகளைச் சந்தித்துவருகிறது. 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த பா.ம.க. 18 இடங்களைக் கைப்பற்றியது.

ஆனால், 2011 சட்டமன்றத் தேர்தலில் அதே கூட்டணியில் இடம்பெற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைந்தது. 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவின் கூட்டணியில் இடம்பெற்று ஒரே ஒரு இடத்தைப் பெற்றது பா.ம.க.

இதற்குப் பிறகு, எந்தக் கூட்டணியிலும் இடம்பெறாமல் 'மாற்றம் முன்னேற்றம் அன்புமணி' என்ற கோஷத்தை முன்வைத்த பா.ம.க., 2016ஆம் ஆண்டு தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. ஆனால், அந்தத் தேர்தலில் கட்சி சுமார் ஐந்தரை சதவீத வாக்குகளைப் பெற்றாலும் ஒரு இடத்திலும் வெற்றிபெறவில்லை.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுமும் பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளில் முன்னிலை வகிக்கும் கட்சிக்கு தவிசாளர் பதவியை வழங்குவது என்றும், ஆதரவளிக்கும் கட்சிக்கு உபதவி சாளர் பதவியை வழங்குவது எனவும் தமிழ்த் தேசிய கட்சிகள், முஸ்லிம் கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே. தமிழ் தேசியக் கட்சிகள் என்றால் தமிழ் அரசு, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற மூன்று கட்சிகளும்தானே. ஆனால் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமாரோ கொள்கை அடிப்படையில்தான் கூட்டு என்று கூறிக் கொண்டிருந்தாரே. இப்போது கொள்கையை விட்டு விட்டாரா அல்லது மற்றவர்களும் அவரது கொள்கை தான் என்று ஏற்றுக்கொண்டுவிட்டாரா?

**வியுக்தியார்:** கொள்கையளவில்தான் கூட்டு என்று கூறிக்கொண்டிருந்தவர், இப்போது அவைபற்றி பேசாமல், கூட்டாக ஆட்சி அமைப்பது என்று முடிவெடுத்திருப்பது நல்ல விடயம்தான். ஆனால், உள்ளூராட்சி சபைகளில் முன்னிலை வகிக்கும் கட்சிகளுக்கு தவிசாளர் பதவியை வழங்குவது என்றும், ஆதரவு தரும் கட்சிக்கு உப தவிசாளர் பதவியை வழங்குவது என்றும் முடிவெடுத்திருப்பதாக சுமந்திரன் கூறியிருக்கிறார். ஆனால் முன்னிலை பெற்ற கட்சி நியமிக்கும் தவிசாளரைவிட ஆளுமையுள்ள ஒருவர் ஆதரவு வழங்கும் கட்சியில் இருந்தால், அவருக்கு உபதவிசாளர் பதவிதான் கொடுக்க வேண்டும் என்பதல்ல. தமிழ் தேசியக் கட்சிகள் எல்லாம் இவ்வாறு ஒன்றிணைவது பதவிக்காக அல்ல, தமிழ்மக்க ளுக்கு இந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் சில - பல நல்ல விடயங்களைச் செய்வதற்காகவும்தான் என்பதை நிரூபிக்கவேண்டும். தமிழ் அரசு கட்சிக்கு தலைவராக சிறிதரன் தெரிவுசெய்யப்பட்ட பின்னரும் அவரின் கீழ் தான் இருப்பதா என்று அதனை ஏற்க மறுக்கும் சுமந்தி ரன், யார் தவிசாளராகவும் யார் உப தவிசாளராகவும் பணியாற்ற வேண்டும் என்பதையும் தீர்மானிக்கக்கூடிய வர்தானே. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியினர் சில சபைகளில் தமது உறுப்பினர்களை தவிசாளர்களாக நியமிக்குமாறு கோரியிருப்பதாகவும், சுமந்திரன் கூறியிருக்கிறார். இங்கே கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தகுதியானவர்கள் கைகளில் நிர்வாகம் செல்வதுதான் தமிழ் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**



**கேள்வி:** “குமுதினிப் படகில், குருநகர் கடலில், கொக்கட்டிச்சோலையில், சத்துருக்கொண்டானில், வாகரை யில், நவாலியில், நாகர் கோயிலில் தொடங்கி முள்ளிவாய்க் கால் வரை கொத்துக்கொத்தாக எங்களை கொன்றொழித்துவிட்டு, ஈழத்தில் இனப்படுகொலை நடைபெறவே இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், நாமல் ராஜபக்ஷவும், அலி சப்ரி யும் தெரிவித்துள்ள கருத்துகள் உலகத்தின் மனச் சாட்சியை உலுக்கத்தக்க, சிங்கள வல்லாதிக்க வெளிப் பாட்டுக் குரியவை. அத்தகைய கருத்துகளை முன்வைத் தோர்க்கு எதிராக நான் எனது வன்மையான கண்டனங்க ளைப் பதிவுசெய்கிறேன்” என்று தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரி வித்துள்ளாரே.

**வியுக்தியார்:** உண்மைதான். கனடாவில் இனப்படுகொலை நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் இவ்வாறு கூறியிருப்பது, கண்டனத்திற்குரியதுதான். ஆனால் நல்லாட்சி காலத்தில் அரசாங்கத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைந்திருந்த தமிழ் அரசு கட்சி, அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக இனப்படுகொலை நடந்தது என்பதை நிரூபிப்பதற்கு நம்மிடம் போதிய ஆதாரங்கள் இல்லை என்றும், அதைவிடக் கொடுமையாக - நடந்து முடிந்த சம்பவங்களுக்காக சர்வதேச விசாரணையே நடந்து முடிந்து விட்டது என்றும் கூறியபோது, நமது சிறிதரன் அமைதியாகத்தானே இருந்தார். நீங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து இருக்கும் போது செய்ததை தானே, விஜித ஹேரத்தும் அலி சப்ரியும் செய்கிறார்கள் என்று ஒரு தமிழரும் தங்களை கேள்வி கேட்கப்போவதில்லை என்பது சிறிதரனுக்கு தெரியாதா என்ன?

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியபோதும், ஆட்சியமைக்கும் பெரும்பான்மை கிடைக்காத உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைத்தால், அதற்குஎதிராக நிறைவேற்று அதிகாரம் மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பயன்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்த கருத்துக்கு, ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதே. ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு அதிகாரத் துஷ்பிரயோகமாக அமையும் என்ற வகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்த அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இந்த விடயத்தில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தீர்மானிக்கும் உரிமையை ஜனாதிபதி மீறுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளாரே.

**வியுக்தியார்:** உண்மையில் மக்களின் தெரிவாக தேசிய மக்கள் சக்தியே இப்போதும் இருக்கின்றது என்பதில் யாரும் கருத்துவேறுபாடு கொண்டிருக்கமாட்டார்கள். ஆனால் இந்த கலப்பு தேர்தல் முறை காரணமாக மக்கள் பெருவாரியாக அவர்களை தெரிவுசெய்திருக்கின்றபோதிலும் பல இடங்களில் தனித்து ஆட்சியமைக்க அவர்களுக்கு போதிய பலம் இல்லை. அதனால் எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முயற்சிசெய்வதையே ஜனாதிபதி எச்சரித்திருக்கிறார். ஜனநாயக முறைப்படி எதிரணிகள் ஆட்சியமைப்பதை தனது நிறைவேற்று அதிகாரத்தையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பயன்படுத்தி தடுக்கப்போவதாக அவர் எச்சரித்திருக்கிறார். அதன்மூலம் தாங்கள் புதிய சட்டங்களை கொண்டுவந்து எதிரணியின் முயற்சியை முறியடிப்போம் என்கிறார் போலும். ஜனாதிபதி தேர்தலில் அவர் பெற்ற வாக்குகளிலும் பார்க்க மற்றைய எதிரணியினர் பெற்ற வாக்குகள் அதிகமானவை. ஆனால் நமது அரசியலமைப்பின்படி ஐம்பது வீதமான வைக்குகளைப் பெறாதபோதிலும் அவரால் ஜனாதிபதியாக முடிந்தது. தனது வெற்றிக்கு சட்டத்தில் என்ன கூறப்பட்டதோ அதனை செய்தவர்கள், இப்போது தங்களது வெற்றிக்காக சட்டத்தையே மாற்றுவோம் என்பதோ அல்லது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்சியை கலைப்போம் என்பதோ ஜனநாயக மறுப்பாகத்தான் இருக்கும் என்பது நமது ஜனாதிபதிக்கு தெரியாததல்லவே.

---

**இ. கோகுலன்**
**குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** “1996ஆம் ஆண்டு மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன். 2015 மாவட்ட செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையிலிருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன” என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளாரே. இதன்மூலம் அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிகின்றதா?.

**வியுக்தியார்:** இதில் புரிந்துகொள்வதற்கு என்ன இருக்கின்றது?. 1996ம் ஆண்டு இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருந்த வீடுகள் நல்லநிலையில் இருந்தன. ஆனால் 2015ல் பார்த்தபோது அவை இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன என்கிறார். அதாவது இராணுவத்தினரே அவற்றை இடித்து தரைமட்டமாக்கியிருக்கின்றனர் என்று சொல்வதாகவே புரிந்துகொள்ள முடிகின்றது. அண்மையில் ஒரு சட்டத்தரணியுடன் தையிட்டி விகாரை பற்றி கதைத்துக்கொண்டிருந்த போது அவர் சொன்னார், அந்த விகாரையை இராணுவத்தினரே முழுக்க முழுக்க தமது செலவில் கட்டி முடித்திருக்கின்றனர். அதாவது பாதுகாப்பு அமைச்சுக்கென்று ஒதுக்கப்படும் பெருந்தொகைப்பணத்தில் படையினருக்கு கிடைப்பதிலிருந்து அவர்கள் விகாரையை கட்டியிருக்கின்றனர். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டபோது எதிர்க் கட்சியிலிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வரவு - செலவுத்திட்டத்திற்கு ஆதரவாகவே வாக்களித்தது. ஆக, தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் விகாரையைக் கட்டுவதுபோல அங்கே உள்ள இந்துக்கோவில்களையும் மீளக்கட்டித்தாருங்கள் என்று கோருவதற்கு பதிலாக, நம்மவர்கள் விகாரையை இடிக்கக் கேட்கிறார்கள் என்றார் அந்த சட்டத்தரணி. ஆளுநர் மனசு வைத்தால், இடிக்கப்பட்ட அந்த வீடுகளையும் படையினர் திருத்தி கொடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைக்கலாம்.

---

**ஜி. கிருசாந்தன்,**
**டிக்கோயா, ஹட்டன்.**

**கேள்வி:** கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும் எனவும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடை செய்திருந்தால் பல பிரச்னைகளுக்கு தீர்வு கண்டிருக்கலாம் எனவும் பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளாரே. இவரைப் போன்றவர்கள் அரசியலில் பிரவேசிப்பதையும் ராஜபக்ச தடைசெய்திருந்தால், அவர் இவ்வளவு மோசமாக அரசியலில் தோல்வியடைந்திருக்கமாட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றதே. உங்களுக்கு?

**வியுக்தியார்:** இவர் மட்டுமல்ல இவரைப் போல பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு தமது அரசியல் மட்டுமல்ல, தமிழ் அரசியல் பற்றியும் எதுவும் புரிவதில்லை. இந்த லட்சணத்தில் புலம்பெயர்தமிழர் அரசியல் பற்றியும் அடிக்கடி இவர்கள் தப்புத்தப்பாக எதையாவது சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றனர். கனடாவில் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவுத்தூபி அமைக்கப்பட்டது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் என்றுதான் இவர் நினைக்கிறார் என்று தெரிகின்றது. அதைவிட அப்படியொரு அமைப்பே இப்போது இல்லை என்பது கூட அவருக்கு தெரியவில்லை. கனடாவில் இப்படி தூபி அமைக்கப்பட்டதற்கும் இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகள்- தலைவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது முழுக்க முழுக்க அங்குள்ள தமிழர்களின் முயற்சியின் பயனாக வந்தது. இவர் இங்குள்ள தமிழ் தேசியத் தலைவர்களை இப்படி ‘கொம்புசீவி” வளர்த்து விடப்பார்க்கிறார். தமிழ் தேசியத் தலைவர்கள் இங்கு பலமாக இருந்தால் தானே இவராலும் தெற்கில் இனவாதம்பேசி தனது இருப்பை தக்கவைக்கலாம். அதற்காகவே அவர் இப்படி பேசிக்கொண்டிருக்கிறார்.

---


**எஸ். கார்த்திகேசு**
**திருக்கோவில், அம்பாறை.**




**கேள்வி:** பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித் துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை, ஊர்காவற் துறை பிரதேச சபை ஆகிய நான்கு சபைகளிலும் தவிசாளர் பதவிக்காக எமது உறுப்பினர்களைக் களமிறக்கு வோம்”, என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றவர் கள்தான் ஆட்சியமைக்க உரிமைகோர தகுதியுடைய வர்கள் என்பது பொதுவானதுதானே. பிறகு இவர் எதற்காக உரிமைகோரி அறிவித்தல் விடுக்கிறார்?

**வியுக்தியார்:** நீங்கள் சொல்வதுபோல அதிக ஆசனங்களை பெற்ற கட்சிதான் ஆட்சியமைக்க உரிமைகோருவது ஜனநாகப் பண்பு. ஆனால் ஆட்சி அமைக்க - அல்லது தவிசாளரை நியமிக்கின்றபோது அவரது நியமனத்தை சபையிலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவும் அல்லவா வேண்டும். அப்படி பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்றால் அதற்காக மற்றக்கட்சிகளுடன் பேசி உடன்பாடு எட்டவும் அல்லவா வேண்டும். அப்படி இல்லாமல் தன்னிச்சையாக இவர் இப்படி அறிவிப்பது வேறு யாரோ ஆட்சியமைப்பதை குழப்புவதற்காகவா என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை. அதைவிட நமக்கு உறுத்துவது, ஊர்காவற்றுறையில் இவரது கட்சி இரண்டாவது இடத்தில் தானே இருக்கின்றது. அப்படி இருக்கையில் இவர் தவிசாளர் பதவிக்கு களம் இறங்கு வோம் என்றால்,- இவர் அங்கு அதிக இடங்களைப் பெற்ற ஈபிடிபியை தோற்கடித்து வேறு ஒருவரை தவிசாளராக்குவதற்கு முடிவெடுத்துவிட்டாரோ தெரியவில்லையே. அல்லது தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர்களை சங்கடத்தில் ஆழ்த்த முயற்சி செய்கிறாரோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பாகிஸ்தானுக்கு துருக்கியின் இராணுவ உதவி! இந்திய- துருக்கி முரண்பாடுகளின் பின்னணி:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்தியாவுடனான துருக்கியின் உறவுகளை ஒப்பிடும்போது பாகிஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையிலான உறவுகள் மிக வலுவாக உள்ளதை அண்மைய போரின் பின்னர் வெளிப்படையாக தெரிய வந்துள்ளது.

காஷ்மீர் விவகாரத்தில் துருக்கியின் நிலைப்பாடு, இந்தியாவிடமிருந்து அது விலகி இருப்பதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானின் ராணுவத்தை வலுப்படுத்தும் வகையில் சீனா தொடர்ந்து உதவி செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக சீனாவை போல் பாகிஸ்தானுக்கு ராணுவ உதவிகளை துருக்கியும் தற்போது செய்து வருகிறது.

பாகிஸ்தானின் ராணுவத்தை பலப்படுத்தும் வகையில் பல உதவிகள் செய்யப்படும் என்று துருக்கி அறிவித்துள்ளதால் இந்தியாவுக்கு பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மே மாத தொடக்கத்தில் இந்தியாவுக்கு எதிரான தாக்குதல்களுக்கு பாகிஸ்தானுக்கு உதவி செய்த துருக்கி, அஜர்பைஜான் நாடுகளுக்கு கடும் எதிர்ப்பு இந்தியாவில் எழுந்து வருகிறது. பாகிஸ்தானுக்கு எதிராக ஒப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. இதற்கு எதிராக பாகிஸ்தான் டிரோன்கள், ஏவுகணைகள், போர் விமானங்கள் மூலம் இந்தியா மீது பதில் தாக்குதல் நடத்தியது.

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் இந்நடவடிக்கைக்கு துருக்கி மற்றும் அஜர்பைஜான் ஆகிய இருநாடுகள் ஆதரவாக இருந்தன. பாகிஸ்தான், துருக்கியின் ஐந்நூறுக்கும் மேற்பட்ட டிரோன்களை பயன்படுத்தி இந்தியா மீது தாக்குதல் நடத்தியது.

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானுக்கு உதவி செய்த துருக்கி மற்றும் அஜர்பைஜான் நாடுகளை வர்த்தக, இராஜதந்திர ரீதியாக புறக்கணிக்க குரல்கள் கடுமையாக எழுந்துள்ளன.



பாகிஸ்தான் எங்களின் உண்மையான நண்பன் என்றும், எதிர்காலத்தில் தொடர்ந்து துணை நிற்போம் என்றும் துருக்கி அதிபர் எர்துவான் அண்மையில் தெரிவித்துள்ளார்.





### பாகிஸ்தானின் நண்பன் துருக்கி!

இந்நிலையில் பாகிஸ்தான் எங்களின் உண்மையான நண்பன் என்றும், எதிர்காலத்தில் அந்த நாட்டிற்கு நாங்கள் தொடர்ந்து துணை நிற்போம் என்றும் துருக்கி அதிபர் எர்துவான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு குரல் கொடுத்த துருக்கிக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவித்த பிறகு, பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப்பைப் பாராட்டி எர்துவான் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

துருக்கிக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சகோதரத்துவம் உண்மையான நட்புக்கு ஒரு சான்றாகும். இந்தியாவின் 'ஆபரேஷன் சிந்தூர்" நடவடிக்கையின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த துருக்கி நாட்டுக்கு இந்தியாவில் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது.

கடந்த காலங்களில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக துருக்கி நின்றது போல, எதிர்காலத்திலும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நிற்போம். பாகிஸ்தான்-துருக்கி நட்புறவு நீடூழி வாழ்க என்று அதிபர் எர்துவான் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பற்றி துருக்கி:

பாகிஸ்தானுக்கு காஷ்மீர் எவ்வளவு முக்கியமானதோ அந்த அளவிற்கு துருக்கிக்கும் அது முக்கியமானது என்று 2020 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அதிபர் எர்துவான் கூறியிருந்தார்.

எங்கள் காஷ்மீரி சகோதர சகோதரிகள் பல தசாப்தங்களாக துன்பப்பட்டு வருகின்றனர். காஷ்மீர் விவகாரத்தில் நாங்கள் உறுதியாக பாகிஸ்தானுடன் உள்ளோம். ஐநா பேரவையில் இந்த விவகாரத்தை எழுப்புவோம் என்று துருக்கி அதிபர் பாகிஸ்தான் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

காஷ்மீர் பிரச்னைக்கு போர் மூலம் தீர்வு காண முடியாது. இதற்கு சர்வதேச நீதி மூலமே தீர்வு காண முடியும். இந்த வகையான தீர்வுதான் அனைவருக்கும் நன்மை தரும். நீதி, அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கு துருக்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

காஷ்மீர் மக்களை எப்போதும் மறக்கவே முடியாது என்றும் எர்துவான் கூறினார். அப்போது இந்திய வெளியுறவு அமைச்சகம் எர்துவானின் பேச்சை நிராகரித்து அறிக்கை வெளியிட்டது. இந்திய நாட்டின் உள்விவகாரங்கள் குறித்து துருக்கி பேசக்கூடாது என்று இந்தியா கடுமையாக கூறியிருந்தது.

### இந்தியாவுடனான துருக்கியின் உறவு:

இந்திய பாகிஸ்தான் இடையே நீண்ட காலமாக பிரச்னை இருக்கிறது. பாகிஸ்தான் தீவிரவாதத்துக்கு துணை செய்வதோடு, இந்திய நாட்டுக்கு சொந்தமான காஷ்மீரை உரிமை கொண்டாடி வருகிறது என இந்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. அதேபோல் இந்தியாக்கும், சீனாவுக்கும் இடையேயும் மோதல் போக்கும் இருக்கிறது. இதனால் சீனா, பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. பாகிஸ்தானுக்கு அதிகளவில் நிதி உதவி, கடனுதவி செய்கிறது. மேலும் பல ராணுவ உதவிகளையும் செய்து வருகிறது.

பாகிஸ்தானில் தற்போது பொருளாதாரம் பெரும் சிக்கலில் உள்ளது. இதனை சாதகமாக்கி சீனா, அந்த நாட்டுடன் நெருக்கம் காட்டி வருகிறது. பாகிஸ்தான் - சீனாவின் இந்த நெருக்கம் என்பது இந்தியாவுக்கு ஆபத்தாகவே பார்க்கப்படுகிறது.

இதற்கு காரணம் இருநாடுகளும் இந்திய நாட்டுடன் மோதலை கடைப்பிடிப்பது தான். இதற்கிடையே தான் தற்போது இந்தியாக்கு பெரும் தலைவலி கொடுத்தது போல பாகிஸ்தான் நாட்டின் ராணுவத்தை பலப்படுத்தும் பணியை துருக்கி கையில் எடுத்தள்ளது.

இதுதொடர்பாக துருக்கி நாட்டின் அதிபர் தையிப் எர்துவான் 'பாகிஸ்தான் பாதுகாப்பு துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான உதவிகளை செய்ய தாராக உள்ளோம். பாகிஸ்தானின் ராணுவ கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த உதவி செய்யப்பட உள்ளது' என தெரிவித்துள்ளார்.

அத்துடன் துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறையில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனங்கள், பாகிஸ்தான் நாட்டின் பாதுகாப்பு துறை நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறை சார்ந்த கம்பெனி பாகிஸ்தானில் உற்பத்தி தொடங்குவதற்கான வசதியை ஏற்படுத்த உள்ளது. அதாவது துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறை நிறுவனமாக 'ரெப்கான்' செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் நிலையில் அதன் புதிய கிளை பாகிஸ்தானில் அமைய உள்ளது.

இந்த நிறுவனம் பாகிஸ்தானில் 155 மில்லி மீட்டர் பீரங்கிகளை தயாரிக்க தொழிற்சாலையை தொடங்க உள்ளது. அதேபோல் பாகிஸ்தானில் வெடிப்பொருள் பாதுகாக்கும் வசதியும் செய்யப்பட உள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் யூனிட் வெடிப்பொருட்களை சேமித்து வைக்க முடியும்.

முன்னதாக இதுதொடர்பான ஒப்பந்தம் துருக்கி - அமெரிக்கா இடையே நடந்தது. இந்த ஒப்பந்தத்தின்படி 155 மில்லி மீட்டர் பீரங்கிக்கான குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை அமெரிக்காவின் டெக்சாஸில் அமைக்கப்பட உள்ளதாக கூறப்பட்டது.

துருக்கி - பாகிஸ்தான் இடையேயான ஒப்பந்தம் என்பது துருக்கியின் ரெப்கான் மற்றும் பாகிஸ்தானின் வா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இடையே நடந்துள்ளது.

பாகிஸ்தானின் வா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் என்பது அந்த நாட்டின் ராணுவத்துக்கு தேவையான ஆயுதங்கள், குண்டுகள், இராணுவ வீரர்களுக்கான பொருட்களை ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வழங்கி வருகிறது. இருநிறுவனங்களும் இணைந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.




இந்த நடவடிக்கை மூலம் பாகிஸ்தான் துருக்கியேயிடம் இருந்து அதிக ராணுவ உதவிகளை பெற முடியும். இது உண்மையில் இந்தியாவுக்கு புதிய தலைவலியாக பார்க்கப்படுகிறது.

### துருக்கி - இந்தியா கருத்து வேறுபாடு:

காஷ்மீர் விவகாரத்தில் துருக்கியின் நிலைப்பாடு, இந்தியாவிடமிருந்து அது விலகி இருப்பது ஒரு முக்கிய விஷயமாகும். இது தவிர 2022 இல் அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா இடையேயான மோதலில் இந்தியாவும் துருக்கியும் எதிரெதிர் தரப்பில் இருந்தன.

அஜர்பைஜான் துருக்கியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது. நீண்டகாலமாக முரண்படும் ஆர்மீனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையில் மோதல் தொடர்கிறது. ஆனால் எப்போதும் அஜர்பைஜானுக்கு துருக்கியின் ஆதரவு இருந்தது. அந்த நேரத்தில் இந்தியா ஆர்மீனியாவுக்கு ஆதரவு அளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. ச. பஸ் சாரதி மீது தாக்குதல் பண்டாரவளையில் வேலைநிறுத்தம்

பதுளை, மே 18

பண்டாரவளை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சாரதி ஒருவர் மீது மதுபோதையில் பயணி ஒருவர் தாக்குதல் நடத்தியதை அடுத்து, சாரதிகளால் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி பண்டாரவளையிலிருந்து பல்லேவெல நோக்கிச் சென்ற கடைசி இரவு பஸ்ஸில் மதுபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்ட நபரை பஸ் சாரதி எச்சரித்துள்ளார்.

குறித்த நபர், பஸ் சாரதியை அச்சுறுத்திவிட்டு இறங்கியதாகவும், சாரதி வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, இரும்புக் கம்பியால் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பஸ் சாரதி தற்போது பண்டாரவளை மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பண்டாரவளை பொலிஸார் சந்தேக நபரை பல்லேவெல பகுதியில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய பின்னர் குறித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாராலும் பண்டாரவளை சாலையாலும் தனக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என்று தாக்குதலுக்குள்ளான சாரதி தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, சாரதிகளால் வேலைநிறுத்தம் தொடங்கப்பட்டுள்ளது. (எ)

# கொஸ்லந்த வனப்பகுதியில் கஞ்சா சேனை சுற்றிவளைப்பு

## 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகள் அழிப்பு

பதுளை, மே 18

கொஸ்லந்தையிலுள்ள வனப்பகுதியொன்றில் சட்டவிரோதமான முறையில் வளர்க்கப்பட்ட கஞ்சா சேனையொன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கொஸ்லந்த மஹாலந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள அளுத்வெல ஹமுதுரு வனப்பகுதியில் ஓர் ஏக்கர் வனப்பகுதியில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட கஞ்சா சேனையே விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சா சேனையில் வளர்ந்திருந்த, சுமார் 6 அடி உயரமுள்ள 50, 420 கஞ்சா செடிகளும் அரை ஏக்கரில் வளர்க்கப்பட்ட 04 அடி உயரமுள்ள 26,995 கஞ்சா செடிகளும் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன.



இந்த கஞ்சா சேனையின் உரிமையாளர்கள் குறித்து இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதோடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கனடாவின் தமிழின படுகொலை...

கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியைக் கைப்பற்றினால் அவற்றுக்கான ஆயுட்காலம் சில மாதங்களே இருக்குமென்ற இவரது எச்சரிக்கை, அரசமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றத்தினூடாக அச்சபைகள் வீழ்த்தப்படும் என்பதுதான்.

இந்த எச்சரிக்கை தமிழர் தாயகத்துக்கும்கூட பொருத்தப்பாடு உடையது. பல சிறிய கட்சிகளின் ஆதரவோடு சபைகளைத் தம்வசப்படுத்த தமிழரசுக் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இது சவாலாகவே அமையும். அநுர குமரவின் தம்மிஷ்டப்படியான இந்த எச்சரிக்கையை கொழும்பின் ஆங்கில பத்திரிகையான ஐலன்ட் ஷஅதிகார ஆணவம்; என்று சரியாகத் தலைப்பிட்டுள்ளது.

இலங்கையில் இரண்டு தடவை பயங்கரவாதம் வழியாக ஆட்சியைக் கைப்பற்ற முனைந்து, இரண்டு தடவைகளும் தடைசெய்யப்பட்டு, சிங்கள அரசியல் கட்சிகளின் சீர்கேட்டினால் கிடைத்த இடைவெளியை பயன்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி தனது திட்டம் என்ன என்பதை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது.

அநுர குமர மெதுமெதுவாக செயற்படுத்த விரும்பும் மாற்றங்களை தெரியப்படுத்துகிறார். இவைகள் முழுமையாக செயற்படுத்தப்படுமானால் இந்து சமுத்திரத்தின் குட்டித்தீவு தேர்தல்களற்ற, அரசியல் கட்சிகளற்ற, நவீன சோசலிஸ நாடாகலாம். யார் கண்டது?

# பன்முக சமுதாயம் பன்முக...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

புரவுக்கலாசாரம், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு கோட்பாட்டு அடிப்படையில் எதிர்ப்பை வெளிப்படுத்தியதன் மூலமாகக் கட்டியெழுப்பப்பட்ட நீண்டகால அடையாளத்தைக் கொண்ட ஒரு அரசியல் கட்சிக்கு அவ்வாறு கூட்டணி அமைப்பது ஒரு சவாலாகவே இருக்கும்.

ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா அபகீர்த்திக்குள்ளான கட்சிகளுடன் கூட்டணிகளை அமைப்பதில் தங்களுக்கு இருக்கும் தயக்கத்தை வெளிக்காட்டியிருந்தார். ஆனால், தங்களது கட்சியின் பண்புகளை ஆதரிக்கும் சுயேச்சை வேட்பாளர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் விருப்பத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

இந்த நிலைப்பாட்டை விரிவுபடுத்த முடியும், விரிவுபடுத்த வேண்டும். குறிப்பாக, வடக்கு, கிழக்கில் சிறுபான்மைச் சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்துகொண்டு பிரதான அரசியல் போக்கிற்கு வெளியில் இருக்கும் அரசியல் அமைப்புகளை உள்ளடக்குவது குறித்து தேசிய மக்கள் சக்தி சிந்திக்க வேண்டும்.

இலங்கையைப் போன்ற ஒரு பன்முக மற்றும் பல்லின சமுதாயத்தில், ஜனநாயக நியாயப்பாடும் பயனுறுதியுடைய ஆட்சிமுறையும் கூட்டணி அமைப்பை வேண்டி நிற்கின்றன. குறிப்பாக , வடக்கு, கிழக்கில் நியாயப்பாடுடைய சிறுபான்மைக் கட்சிகளுடன் ஊடாட்டங்களைச் செய்வதன் மூலமாக தேசிய மக்கள் சக்தி அதன் மையப்பண்புகளைச் சமரசம் செய்யாமல் கோட்பாட்டு அடிப்படையிலான ஆட்சிமுறையில் ஈடுபடமுடியும். இந்த அணுகுமுறையை நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளுக்கு விரிவுபடுத்த வேண்டிய அவசியமும் இருக்கிறது.

19 ஆம் நூற்றாண்டின் ஆங்கில அரசியல் தத்துவ ஞானி ஜோன் ஸ்ருவர்ட் மில் கூறியதைப் போன்று 'ஒரு அரசின் பெறுமதி நீண்டகால நோக்கில் அதை உருவாக்கியிருக்கும் தனிநபர்களின் பெறுமதியேயாகும்". பன்முக சமுதாயத்தில் அந்த பெறுமதி சகல தரப்புகளையும் அரவணைத்து தீர்மானங்களை மேற்கொள்ளும் அணுகுமுறையின் ஊடாக மாத்திரமே அடைய முடியும்.

# முறுக்கு பைக்கற்றுக்குள் ஐஸ் போதைப்பொருள்!

கொழும்பு, மே 18

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களை கொண்டு சென்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண்ணை நாளை 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பெண் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரை சந்திப்பதற்கு முறுக்கு பைக்கற்றுடன் சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முறுக்கு பைக்கற்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4,674 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 5,625 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# இளைஞன் சுட்டுக்கொலை; மேலும் ஒரு நபர் கைதானார்

கொழும்பு, மே 18

கொழும்பு - கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த மே மாதம் 05 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் ஹோமாகம - மாகும்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு, பன்னிப்பிட்டிய, மாகும்புர பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடையவர் ஆவார்.

கல்கிஸ்ஸை, சில்வெஸ்டர் வீதிக்கு அருகில் கடந்த 05 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றுக்கு முன்னால் நின்ற இளைஞன் ஒருவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றனர்.

இதன்போது அந்த இளைஞன் துப்பாக்கி தாரிகளிடமிருந்து தப்பிச் செல்வதற்காக நீண்ட தூரம் ஓடினார்.

ஆனால் துப்பாக்கிதாரிகள் இளைஞனை துரத்திச் சென்று நடுவீதியில் வைத்து சுட்டுக் கொலை செய்தனர்.

தெஹிவளை, ஓபன் பிளேஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற சந்தேக நபர் ஹோமாகம - மாகும்புர பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாமகவில் தந்தை...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றாலும் வெற்றி ஏதும் கிடைக்கவில்லை. இதற்குப் பிறகு 2021ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற பா.ம.க., அந்தத் தேர்தலில் 23 இடங்களில் போட்டியிட்டு ஐந்து இடங்களைப் பிடித்தது. 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்றாலும், ஒரு இடத்திலும் வெல்ல முடியவில்லை.

இந்த நிலையில் கட்சியில் தானே அதிகாரம்மிக்கவர் எனக் காட்டிக்கொள்ள ராமதாஸ் விரும்பினாலும் கட்சியினர் அன்புமணியின் பக்கமே செல்ல விரும்புகிறார்கள் என்கிறார் கார்த்திகேயன்.

'இன்று ராமதாஸ் கூட்டிய கூட்டத்திற்கு பெருமளவிலான நிர்வாகிகள் வராததற்குக் காரணம், அவர்கள் பா.ம.கவின் எதிர்காலம் இனி அன்புமணி ராமதாஸ் என முடிவுசெய்துவிட்டதுதான். மேலும், பா.ம.கவின் வாக்கு வங்கி எளிதில் பா.ஜ.கவின் வாக்கு வங்கியாகும் அபாயமிருக்கிறது. அதனை ராமதாஸ் உணர்ந்திருக்கிறார்.

அன்புமணி ராமதாஸும் இதனை உணர வேண்டும். அதை நோக்கி அவரை வழிநடத்திச் செல்லலாம். அதை விட்டுவிட்டு வெளிப்படையாக அவரை விமர்சிப்பது கட்சிக்கு எவ்விதத்திலும் நன்மை பயக்காது" என்கிறார் அவர்.

2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருக்கும் நிலையில்தான் பாட்டாளி மக்கள் கட்சிக்குள் தந்தை - மகன் இடையிலான முரண்பாடுகள் வெடித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை குற்றஞ்சாட்டியவர் பயணித்த வாகனம்மீது துப்பாக்கி சூடு

கொழும்பு, மே 18

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துஷித் ஹல்லோலுவ பயணித்த வாகனம்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அவரின் ஆவணங்கள் பறித்துச் செல்லப்பட்டன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துஷித ஹல்லோலுவ உட்பட மூவர் பயணித்த அந்த வாகனம்மீதே கொழும்பு - நாரஹேன்பிட்டியில் வைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அடையாளம் தெரியாத நபர்கள் இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு, அவருக்கு சொந்தமான ஆவணங்கள் சிலவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கிரீஸ் நாட்டில் பெரும் முதலீடு ஒன்றை செய்துள்ளார் என்று துஷித ஹல்லொலுவ அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார். இது தொடர்பில் அவர் சி. ஐ. டியினரிடம் 6 மணிநேர வாக்குமூலமும் அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 23ஆம் திகதி வரை கனமழை தொடரும்

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் கனமழை எதிர்வரும் 23ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறையின் மூத்த விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மழையின் போது இடிமின்னல் தாக்கங்களும் இடம்பெறும் என்பதனால் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம் எனவும் கூறியுள்ளார்.

அண்மித்த ஆண்டுகளில் மே மாதம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிக மழை தரும் மாதங்களில் ஒன்றாக மாறியுள்ளது. குறிப்பாக நவம்பர் மாதத்துக்கு அடுத்து அதிக மழை கிடைக்கும் மாதமாக மே மாதம் மாறி வருகின்றது.

கடந்த 10 ஆண்டுகளாக மே மாதத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கணிசமான அளவு மழை கிடைத்து வருகிறது.

வடக்கு மாகாணத்தில் மே மாதத்தைப் பொறுத்தவரை 2020 ஆம் ஆண்டு 86 மி.மீ., 2021இல் 117 மி.மீ., 2022இல் 138 மி.மீ., 2023இல் 186 மி.மீ., 2024 312 மி. மீ., நடப்பு ஆண்டில் இதுவரை 161 மி. மீ. மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

பங்கேற்பவர்கள் தீபங்களை ஏற்று வர். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

பிரதான நினைவேந்தல் நிகழ்வுக்கு முன்னதாக காலை 6.30மணி முதல் முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரையில் போரில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக பிதிர்க்கடன் கிரியைகள் நடைபெறவுள்ளன.

இதேநேரம், "தமிழின படுகொலை நாளான மே 18 தினத்தில் (இன்று) நாம் அனைவரும் திரளாகக் ஒன்றுகூடி எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும் அநீதிக்கு நீதி வேண்டியும் ஒன்றுபடுவோம். கொத்து கொத்தாகக் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூருவோம். நாம் அழிக்கப்பட்டோம் என்ற விடயத்தை உரத்து சொல்ல இணைவோம் - என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடக்கு, கிழக்கு பொதுக் கட்டமைப்பின் இணைத் தலைவர் அருட்பணி சின்னத்துரை லியோ ஆமஸ்ரோங் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேசமயம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களிலும் நிகழ்த்துவதற்கு அரசியல் கட்சிகள், பொதுக் கட்டமைப்புகள், பொது நிறுவனங்கள் ஏற்பாடுகளை செய்துள்ளன.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 4 கட்ட ஈழப் போர்களாக நடைபெற்றது. இறுதிப் போர் கட்டம் 2006 - 2009 மே வரை நீடித்தது. மோதலில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் அகப்பட்டனர். இறுதியாக முள்ளிவாய்க்கால் என்ற சிறு நிலப் பரப்புக்குள் மக்கள் முடக்கப்பட்ட போது மனித குல விரோத செயல்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்கள் - துயரங்களை - அழிவுகளை சந்தித்தனர். இறுதிக்கட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. இந்தப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட மே 18ஆம் திகதி தமிழின அழிப்பின் அடையாள நாளாக தமிழ் மக்கள் நினைவேந்தி வருகின்றனர். கொல்லப்பட்ட தமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அதே நேரம், படுகொலை செய்யப்பட்ட தமது இன மக்களுக்காக நீதி கோரும் நாளாகவும் இந்த நாள் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## தேசிய...

முன்னெடுத்துவருகின்றனர். எனவே, வீண் விமர்சனங்கள் குறித்து நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை - என்றார்.

(அ)

## வலி.வடக்கில்...

இதற்கு பதில் வழங்கிய வடக்கு மாகாண ஆளுநர் தற்போதுள்ள ஜனாதி பதியின் காலத்தில் காணிகள் அனைத் தும் படிப்படியாக விடுவிக்கப்படும் என குறிப்பிட்டதாக காணி உரிமையாளர்கள் குறிப்பிட்டனர். (அ)

## தேசபந்து...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குழுவின் முதற்கட்ட விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்டு பரிசீலணை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவி அதிகாரங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து, அறிக்கையிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## வாகன...

வாகனங்களைச் செலுத்தும்போது நித்திரை அல்லது களைப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் வாகனத்தை சுமார் 20 நிமிடம் நிறுத்தி, ஓய்வெடுத்த பின்னர் மீண்டும் பயணிக்குமாறும் அவர் வாகனச் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல் நீண்ட தூரப் பகுதிகளுக்கு பயணிக்கும் போது குறைந்த பட்சம், ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்களுக்கு ஓய்வெடுக்கு மாறும் இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

(அ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ் மக்கள் தேசமாக திரளவேண்டும்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

முள்ளிவாய்க்கால், மே 18

இனப்படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர முள்ளிவாய்க்கால் மண்ணில் வட, கிழக்கு வாழ் தமிழர்கள் தேசமாக திரள வேண்டும்", என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டின் பின்னர் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தயாபரன் லகிர்தர் நேற்று ஊடகங்களிடம் பேசியபோதே இந்த அழைப்பை விடுத்தார்.

மேலும், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் இனப்படுகொலை செய்யபட்ட இந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒழுங்கமைப்புகளை மேற்கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக வருகை தந்துள்ளோம்.

நாளையுடன் (இன்றுடன்) எமது இனம் இனப்படுகொலை செய்யப்பட்டு 16 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தமிழ் மக்களாக அனைத்து ஈழத் தமிழர்களுக்கும் வரலாற்று கடமை உள்ளது. எமது இந்த வரலாறு அடுத்த கட்ட சந்ததிக்கு கடத்தப்படவேண்டும். சர்வ தேச சமூகத்துக்கு தொடர்ச்சியாக எமது வலிகளையும் வடுக்களையும் தொடர்ந்து நாம் கூறவேண்டும்

இதனடிப்படையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெறவுள்ள உயிர்நீத்த எம் உறவுகளை நினைவுகூரும் நினைவேந்தலில் இளைஞர்களாக, யுவதிகளாக, தந்தையர்களாக, தாய்மார்களாக, உறவுகளாக, சமூக அமைப்புகளாக, மாணவர்களாக தேசமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் திரள வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமாக கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

(ஐ)

# தமிழ் கட்சிகளின் இணைவு ஆரோக்கியமான அரசியல்!

## பொதுஜன பெரமுன கட்சி

யாழ்ப்பாணம், மே 18

உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் நோக்குடன் வடக்கு, கிழக்கின் தமிழ் கட்சிகள் இணைவு தொடர்பாக திறந்த மனதுடன் சந்திப்புகளில் ஈடுபடுவது ஆரோக்கியமான அரசியலாக உள்ளது என சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அந்தக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீத்நாத் காசிலிங்கம் விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாற்றம் எனும் கருத்தியலை முன்வைத்து ஆட்சியில் அமர்ந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலான தமது ஆட்சிக் காலத்தில் பெயர் சொல்லும் வகையிலான எந்த அரசியல் மற்றும் அபிவிருத்தி நகர்வுகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வடக்கு மக்கள் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். வடக்கு, கிழக்கின் பெரும்பான்மையான சபைகளில் அதிகளவு ஆசனங்களை கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களின் மன ஓட்டத்தை புரிந்து கொண்டு திறந்த மனதுடன் தமக்கிடையிலான இணைவு குறித்து கலந்துரையாடுவது ஆரோக்கியமான அரசியலாக உள்ளது.

நாட்டை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பின்னடைவை நோக்கி வழிநடத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொது எதிரியாக கொண்டு, அவர்களின் சூழ்ச்சி அரசியலில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க தமிழ் கட்சிகள் தமது இணைவை உறுதிப்படுத்த வேண்டும்" என்றும் அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# தேசிய போர் வீரர் நினைவுநாளை நாடுமுழுவதும் அனுஷ்டிக்க ஏற்பாடு!

கொழும்பு, மே 19

"உள்நாட்டு போர் நிறைவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் திங்கட்கிழமை கோட்டை சிறீ ஜெயவர்த்தனபுரவில் உள்ள தேசிய போர் வீரர் நினைவு தூபியில் தேசிய போர் வீரர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது", என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்சல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தை நிறைவு செய்வதற்காக 27 ஆயிரம் படையினர் நாட்டுக்காக தமது உயிரை தியாகம் செய்துள்ளனர்.

மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் வகையிலான நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

16ஆவது தேசிய போர்வீரர் நினைவு திங்கட்கிழமை கோட்டை சிறீ ஜெயவர்த்தனபுரவில் உள்ள தேசிய போர்வீரர் நினைவு தூபியில் நடைபெறவுள்ள பிரதான நிகழ்வு மாலை 4 மணி



முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது. ஜனாதிபதியின் பிரதிநிதியாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர முன்னிலையில் நிகழ்வுகள் நடைபெறும்.

போர் வீரர் நினைவு தினத்தை முன்னிட்டு முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் நாடு தழுவிய சமூக நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அட்மிரல் ஒவ் த ஃப்ளீட் வசந்த கரன்னகொட, மார்ஷல் ஒவ் த எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொள்வர்.", என்றும் அவர் கூறினார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## சவூதி அரேபிய தூதுவர் ரிஷாத் எம். பி. சந்திப்பு



கொழும்பு, மே 18

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியை நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இது தொடர்பில் ரிஷாத் எம். பி. தெரிவித்தவை வருமாறு, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவருடன் ஒரு சுமூகமான மற்றும் பயனுள்ள சந்திப்பை மேற்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன் போது, பல்வேறுபட்ட சமகால பிரச்னைகள் குறித்து நாங்கள் விரிவாகக் கலந்துரையாடினோம்.

மேலும், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்தோம் - என்றார். (எ)

## வவுனியாவில் காலை முதல் மின்தடை!

வவுனியா, மே. 18

வவுனியாவின் பல பகுதிகளில் நேற்று காலை முதல் மின் தடை ஏற்பட்ட நிலையில் மின்சார சபைக்கு பலமுறை அறிவித்தும் பலன் இல்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வவுனியாவில் நேற்று காலை முதல் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் பல்வேறு பகுதிகளிலும் மின் தடை ஏற்பட்டிருந்தது. சில மணி நேரங்களின் பின்னர் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு மின் விநியோகம் வழமைக்கு திரும்பியிருந்தது.

எனினும் மகாறம்பைக்குளம் மற்றும் தாண்டிக்குளத்தின் சில பகுதிகளில் காலை முதல் மின் தடை ஏற்பட்டதுடன் அது இன்னும் வழமைக்கு திரும்பவில்லை.

இது தொடர்பாக அப்பகுதி மக்களினால் இலங்கை மின்சார சபைக்கு பலமுறை அறிவிக்கப்பட்டும் அவர்கள் அசண்டையீனமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர். (அ-10)

## நாட்டில் பல பகுதிகளிலும் நேற்று பெய்த கன மழை!

### மக்களின் இயல்பு வாழ்கை பாதிப்பு

கொழும்பு, மே. 18

நாட்டில் பல பகுதிகளிலும் பெய்துவரும் கன மழையின் காரணமாக மக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்பட்டது.

வவுனியாவில் வீசிய சூறாவளிக்காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இதேவேளை - மன்னாரில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நேற்று காலை கடும் காற்று வீசியதுடன் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக மன்னார் பேசாலை கிராம மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்கியதுடன் நேற்றுக் காலை கடற்தொழிலுக்கு சென்றிருந்த மீனவர்கள் அவசரமாக கரைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட ட்ரோலர் படகுகள் காற்றில் சிக்கிய நிலையில் படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டதாக தெரியவந்தது. (அ)

# உப்பைக்கூட முறையாக வழங்கமுடியாதுள்ள அரசு

### சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பு, மே 18

**உப்பைக் கூட மக்களுக்கு சரியாக வழங்கிக் கொள்ள முடியாத அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாட்டு மக்கள் தற்போது பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். வருமான மூலங்கள் மூடு கண்டு, சரியான வாழ்வாதாரம் கிடைக்காமையால், மக்களுக்கு கிடைக்கும் வருமானம் குறைந்து, பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. அரிசி, பால் மா, தேங்காய் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்குத் தேவையான உப்பைக் கூட இந்த அரசாங்கத்தால் வழங்க முடியாது போயுள்ளது என்றும் சஜித் கூறினார்.

நாட்டில் தற்போது வினைதிறன் அற்ற அரச நிர்வாகமே காணப்படுகின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் பேசுவதில் மிகவும் திறமையானவர்களாக இருந்தாலும், மக்களின் பிரச்னைகளுக்கு அவர்களிடம் பதில்களோ தீர்வுகளோ இல்லை. ஆளும் தரப்பினர் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இல்லை என்று மிரட்டல் விடுத்து வருகின்றனர். தற்போதுள்ள தேர்தல் முறையின் கீழ் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் அதிகாரத்தை அமைக்கும் உரிமை எதிர்க்கட்சிக்கும் காணப்படுகின்றது. எனவே உப்பைக் கூட சரியாக வழங்க முடியாத அரசாங்கத்தின் இந்த அச்சுறுத்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அஞ்சாது.

எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மை காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்டவும், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தவும் ஜனநாயக கட்டமைப்பிற்குள் எடுக்க முடியுமான அதிகபட்ச நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும். எதிர்க்கட்சி அதிகாரத்தைப் பெற்றால் அதிகபட்சமாக 3-4 மாதங்களே தக்க வைக்கும் என்று வதந்திகளைப் பரப்புவதன் மூலமும், போலிப் பிரசாரம் செய்வதன் மூலமும் எதிர்க்கட்சியை பலவீனப் படுத்த முடியாது. எதிர்க்கட்சியை இல்லாதொழிக்க இந்த அரசாங்கம் தற்போது பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. இவற்றுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி சிக்கிக் கொள்ளாது.

மக்கள் பிரச்சினைகளை கேட்டறியும் கிராமத்துக்கு கிராமம் நகரத்துக்கு நகரம் வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு மல்லிகாராம வீடமைப்புத் தொகுதி மக்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்தால் செய்ய முடியாததை, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் செய்து காட்டும்.

மக்களின் துன்பங்களைப் போக்கச் செய்வோம். தற்போதைய அரசாங்கம் வாய்போச்சு மூலம் மட்டுமல்லாது பொய்கள் மூலமும் மக்களை ஏமாற்றி வருகிறது. உண்மை, நடைமுறை யதார்த்தம் மற்றும் அபிவிருத்தி மூலம் மக்களை அதிகாரப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும். முக்கிய அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் தேர்தல் மேடைகளில் கலந்து கொள்வதைப் பாரக்கிறோம். இன்று அவர்கள் மக்கள் மத்தியில் செல்கிறார்கள் இல்லை. தேர்தல் முடிந்த பிற்பாடும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அரசியல்வாதிகள் மக்களுக்கான தமது உண்மையான கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றி வருகின்றனர். தேர்தலுக்குப் பிறகும் மக்களின் பிரச்னைகளை தொடர்ந்து ஆராய்ந்து, குறித்த பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்போம் என்று சஜித் தெரிவித்தார். (எ)

## போதைப்பொருளை ஊசி மூலம் உடலில் ஏற்றிய இளைஞர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், மே. 18

தென்மராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், போதைப் பொருளை ஊசி மூலம் உடலில் ஏற்றிய நிலையில் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் போதைப் பொருளை ஊசி மூலம் தொடர்ச்சியாக ஏற்றுபவர் எனத் தெரிய வருகின்றது.

அதற்கமைய, ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றியவேளை, திடீரென மயக்கமடைந்துள்ளார்.

அதன் பின்னர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் போராட்டத்தால் பொதுமக்கள் சிரமம்

கொழும்பு, மே. 18

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பதவி உயர்வு வழங்குவதில் தாமதம் செய்தல் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு செயல்முறையை செயல்படுத்தாமை ஆகிய இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்னிறுத்தி ரயில் அதிபர்கள் சங்கம் நேற்று முன் தினம் நள்ளிரவு தொடக்கம் அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுத்துள்ளது. இதன் காரணமாக பயணிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்

இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கையில்-

இந்த வேலைநிறுத்தத்துகான தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டியது அவசியமான விடயமாகும். அரசாங்கம் நாம் எதிர்பார்த்ததை போன்று செயற்படவில்லை அல்லவா? ஆகவே அரசாங்கம் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

ரயிலில் சுற்றலா செய்வதற்காக நாம் குடும்பத்துடன் வருகை தந்தோம். தற்போது பஸ்ஸில் செல்ல நேரிட்டுள்ளது. உரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆனால் இதன் காரணமாக மக்களே நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். ஆகவே அந்த விடயத்தில் அரசாங்கம் உரியவாறு தலையிடவேண்டும்.

ரயில் இயங்கியது.ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே சேவை இடம்பெறுகின்றது.

வேலை நிறுத்தித்தின் காரணமாக நாமே பாதிக்கப்பட்டுள்ளோம் - என்றனர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தம்முடைய போராட்டம் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன -

ரயில்மா அதிபர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைக்கான தீர்வை பெற்றுத்தராது அவற்றை காலதாமதப்படுத்தும் விடயமே இடம்பெற்று வருகின்றது. அதனைக் கருத்தில் கொண்டு நாம் நேற்று (நேற்றுமுன்தினம்) நள்ளிரவு 12 மணிமுதல் ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இது மக்களை பாதிப்புக்குள்ளாக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படவில்லை. மாறாக எம்முடைய கோரிக்கைகளுக்க தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம். ரயில்மா அதிபர்களுக்கான பதவிவெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு விடயத்தில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. அதற்கான தீர்வை பெற்றுத்தர வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org